புதிசப் பத்திரிகைகாரர்
DUPLICATE

# இந்துசாதனம்

௲௮௱௮௯ (1889)
ஆவணி ௴ ௧௧௳
ஆரம்பமானது.

# THE HINDU ORGAN.

குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

| பத்திரிகைக் கிரயம். | |
|---|---|
| (முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.) | |
| யாழ்ப்பாணப்பட்டினம்: | ரூ. ௨-௨-௦. |
| வெளியூர், இந்தியா: | " ரூ. ௨-௧-௦. |
| தேசவொப்பந்தி: | " ரூ. ௩-௮-௦. |
| தனிப்பிரதி | சதம் -௦௫. |

| விளம்பர விகிதம். | | ரூ. ச. |
|---|---|---|
| முதன்முறைக்கு:— | ஒருகலம் | ௪-௦௦. |
| " | அரைக்கலம் | ௩-௦௦. |
| " | கால்கலம் | ௨. ௦௦. |
| " | ஒரு அங்குலம் | -௫௦. |

அதிகமுறைக்கு தக்கபடி விகிதம் குறைக்கப்படும்

புத்தகம் - ௩௦ | யாழ்ப்பாணம்—காலயுத்தி௵ ஐப்பசி௴ ௨௯௳; ௧௯௧௮-ம் ஆ௵ நவம்பர்௴ ௧௪௳. | இலக்கம்—௧௮.

௨
கணபதி துணை.

சீர்பூத்த வருகிரு அணர்ச்சி தேசக்
கெம்பூத்த திரமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க் கீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிக்கை தொழிலென் றேது
மதம்பூத்த விரவகன்குள் வணக்கொழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானிமம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## விளம்பரம்.

விலை சகாயத்திற்கும்
ஜவுளி நாணயத்திற்கும்
பேர்போனகம்பனி எது?
மதுரை மூ. க.
இராமையர் அன் சன்ஸ்.

எங்கள் ஜவுளிக்கம்பனியில் சுமார் ௪௦ வருஷ காலமாக மக்கள் [illegible] பின்பேரில் கைதேர்ந்த நெசவுகாரர்களைக்கொண்டு பலதேசங்களிலுமுள்ள வியாபாரிகளுக்கும் மற்றும் குடித்தனகாரர்களுக்கும் ஏராளமான தினுசுகள் தயார் செய்து கொடுத்துக்கொண்டும், ஏராளமான தினுசுகள் கைவசம் வைத்துக்கொண்டும், விரும்பி எழுதும் தினுசுகளை யாதொரு பிசகின்றி அனுப்பியும் விசேஷ வியாபாரம் செய்து வருகிறோம் என்பது உலகம் பூராஅறிந்த விஷயம். தவிரத் தற்கால நாகரீகத்திற்குத் தக்கபடி பலவூர் அநேகநூதன தினுசுகளும் வரவழைத்து ஸ்டாக்கில் வைத்துக்கொண்டு சொற்ப லாபத்திற்கு நேரிலும், வி பி யிலும் அனுப்பிக்கொண்டு வருகிறோம். அசலூர் ஆர்டர்களை உடனுக் குடன் கவனித்து வி பி யில் அனுப்புவோம்.

F. M S. பெடரேடெட்மலாய்நாடுகளில் இருப்பவர்கள் ஆர்டருடன் முற்பணம் அனுப்பவேண்டும் அல்லது பாங்க் மூலமாய் பெற்றுக்கொள்ளலாம் சிங்கப்பூர், பினங்கு என்னும் இடங்களுக்கும் வி பி யில் அனுப்புவோம்.

எங்கள் ஜவுளி விபரம் விலை யாப்தா (Catalogue.) இனுமாக எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

மூ. க. ராமய்யர் அன் சன்ஸ்
சுதேசி ஜவுளி வியாபாரிகள்,
மேலைக் கோபுரவீதி
மதுரை.

## சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, ருமாஸ்தகா, பிதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுஸ்லி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், வங்கபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூ

ரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அனேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் நீர்த்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின் வி[illegible]இருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௦. அரைஇருத்தலுக்கு ரூபா ௧௦. கால் இருத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர், பினங்கு முதலிய தொடுவாய் இராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணி ஓடர் அனுப்புதல் வேண்டும்.

க. அருமுகம்பிள்ளை[illegible]
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சகா[illegible]
வைத்தியசாலை,
இல. 96 முதல் மருதானை, கொழும்பு.

## பவளக்கொடிச்சேலை

மிகநேர்த்தியானது
5 முழநீளம்! உழைக்கத்தக்கது
இதைச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லேட் நிறம்



போல் பவளக்கொடிகள் போட்டுச் சுற்றிலும் சிறுகரை கட்டியிருக்கின்றன. இது புதுமாதிரி இதுவரைக்கும் தயாரானதில்லை. இக்காலத்துக்கு மிகவும் உபயோகமானது. இதை ஒவ்வொரு ஸ்திரீகளும் தரித்துகொண்டு அலங்காரபூஷிதர்களாய்ச் சந்தோஷப்படுவீர்களென்றுநம்புகின்றோம்.

சேலை ஒன்றுக்கு விலை ரூபாய் 4-8-0.

பட்டுக்குட்டை.

5 முழநீளம் 2½ முழ அகலம் இதுமிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் பிரகாசிக்கும் இதில்பலவித நிறமுண்டு. குட்டை 1க்கு விலை 2-8-0. விலையை குறிப்பிட்டு எழுதவும். சிங்கப்பூர், செட்டா முதலிய ஆர்டர்களுக்கு: வி. பி. [illegible]

கனக அண்டு கம்பெனி,
பார்க்டவுன் போஸ்டு, மதராஸ்.

## விளம்பரம்.

### நேத்திரரோகிகட்கோரறிவித்தல்.

கண்களிலுண்டாகும் எவ்வித நோய்களுக்கும் எந்த ஆயுள்வேதமுறைப்படி என்னுலாக்கப்பட்ட சிறந்தரமான ஒளஷதங்களைக்கொண்டுநேத்திர வைத்தியம் நடத்திவருகின்றேன். காலை 8 மணிமுதல் 10மணிவரையும் எனது மருந்துசாலையில் நோயாளர் சிகிச்சைபெறலாம்.

நாயன்மார்கட்டு; S. சதாசிவம்பிள்ளை.

### பனைமரங்கள்.

அழுத்தமாய் வெட்டப்பட்டனவும், சிறந்த வயிரமுள்ளனவுமாகிய பனைமரங்கள் யாழ்ப்பாணம் வை. ஆ. அவர்களுடைய வளவின் மேற்குப் பாகத்தில விற்பனவுக்கிருக்கின்றன. விலை மிகவுஞ் சரசம். ஒருமுறை பரிட்சித்துப்பார்க்கவும்.

சிற்றம்பலம் சின்னத்தம்பி,
சண்டிருப்பாய்.

### முதிரை, வேம்பு, பாலை, சோமுந்திரி, பூவரசு,

மேற்சொல்லிய மரங்கள்பலவித நீளத்திலும் சுற்றளவிலும் சேரிரோட்டில் நாசருவத்திற் குசமீபமாயுள்ள ஓர் வளவிற் போடப்பட்டிருக்கின்றன.

வாங்க விரும்புவோர் வேண்டிய விபரங்களை யென்னிடம் அறிந்துகொள்ளலாம்.

Dr. A CHINNIA,
Pettah Dispensary,
Jaffna.

## சுதேச வைத்திய ரத்தினம்.

முன்பதிப்புகளைக்காட்டிலும் விரிவானது.

மூன்றவதுபதிப்பு சித்திரப்படங்களுடன் கூடியது.

இப்புத்தகத்தில் தினந்தோறும் நமது காலடியில் மிதிபடும் புல், செடி, கொடி, காய், கனி, பட்டை, கட்டை, வேர், இலை, பூ, பிசின், வித்து முதலியவைகளைக் கொண்டும், நமது நாட்டுக் கடைகளில் சாதாரணமாய்க் கிடைக்கக்கூடிய கடைசரக்குகளைகொண்டும் வைத்தியர் உதவியின்றி, அவரவர்களே சூரணமாகவும், பஸ்பமாகவும், செந்தூரமாகவும், மாத்திரையாகவும், காஷாயமாகவும், வடகமாகவும், மெழுகாகவும், லேகியமாகவும், திராவகமாகவும், களிம்பாகவும், பிளாஸ்திரியாகவும் இந்திய ஆயுர்வேத முறைப்படியும், இங்கிலீஷ் வைத்திய முறைப்படியுஞ் செய்து, சாதாரண வியாதி முதல் பெரிய வியாதியும் நாட்பட்டதுமானவைகளுக்கும், உபயோகிக்கவேண்டிய விதத்தையும் அளவையும், ஒவ்வொரு பதார்த்தங்களுக்கும் தமிழ், இங்கிலீஷ், லத்தீன் முதலிய பாஷைகளிலுள்ள பல பெயர்களுடனும் விபரமாய் வரையப்பட்டிருக்கின்றது. இன்னும் இப்புத்தகத்தில் வியாதிகளை இலகுவாய்த் தெரிந்துகொள்ள "ரோக அட்டவணை"யும், ஒவ்வொரு வியாதிகளுக்கும் தமிழ் இங்கிலீஷ் பெயர்களுடனும், ஒவ்வொரு வியாதிகளுக்கும் உபயோகிக்கவேண்டிய ஔஷதங்களும் எழுதப்பட்டிருக்கின்றது. சுருக்கச் சொல்லுமிடத்து தேக ஆரோக்கியத்தையும், நோயில்லா வாழ்வையும், சுகசெல்வங்களையும் அளிக்கக்கூடியபுத்தகம் இதுவேயன்றி வேறில்லை. 670 பக்கங்களுள்ளது. கலிக்கோ பைண்டு ரூபா 3. தபால சார்ஜ் அணா 4. "பெதர் வெயிட்" என்னும் விலையுயர்ந்த பேப்பர் பதிப்பு கலிக்கோ பைண்டு ரூபா 3, அணா 8. தபால் சார்ஜ் அணா 5. சிங்கப்பூர் முதலிய அன்னிய நாடுகளுக்குத் தபாற் செலவு அணா 8.

"நமது சிறிய சத்துருக்கள்" அல்லது பிளேக், கலரா, மலேரியா முதலிய கொள்ளைநோய்களின் உற்பத்தி விபரமும், அவற்றிற்கான பரிகாரங்களும். தபாற்செலவுடன் அணா 8.

மானுட ஜீவிய சிந்தாமணி அல்லது ஆண்மையின் அழிவும், அதனையகற்றும் விதமும். ஸ்டிப் பைண்டு ரூபா 2. கலிக்கோ பைண்டு ரூபா 3. தபாற்செலவு அணா 3. கோலாலம்பூர் முதலிய அந்நியநாடுகளுக்குத் தபாற்செலவு அணா 6.

விலாசம்:—டாக்டர் எஸ். சந்திரசேகரர், கும்பகோணம்.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

௧௮௯௩-ம் ஆண்டின் ௮-ம் இலக்கச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் வண்-கிழக்கு வீ. அ. ராம. ராமசாமிச்செட்டியாரிடமும், சி. சு. சி. த. அண்ணாமலைச்செட்டியாரிடமும் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேறபடி சட்டத்தின் ௧௨-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டியனவாகிய நகைகளின் விபரம்.—

| நம்பர். | வரு. | மாதம். | திகதி. | ரூபா. | ஊர்—பெயர். நகை விபரம். |
|---|---|---|---|---|---|
| 475 | 1917 | சித்திரை. | 25 | 40 | சண்டிக்குளி, யாகோப்பு சாமுவேலுப்பிள்ளை பொன் செடியாரச் சங்கிலி 1 |
| 513 | ,, | வைகாசி | 26 | 30 | வண்-கிழக்கு, சினி சின்னத்தம்பி பொன் குண்டுச்சங்கிலி 1. |
| 542 | ,, | ஆனி | 28 | 20 | காரை, வீரகத்தியார் வேலுப்பிள்ளை பொ. திருக்கொண்டாமாலை 1. |

வண்-கிழக்கு சி. சு. சி. த. அண்ணாமலைச் செட்டியிடம்.

| நம்பர். | வரு. | மாதம். | திகதி. | ரூபா. | ஊர்—பெயர். நகை விபரம். |
|---|---|---|---|---|---|
| 2825 | ,, | ஜூன் | 3 | 70 | நீர்வேலியடி, க. பொன்னையா பொன் பட்டணக்காப்பு சோ. 1 |
| 31 | ,, | செப்டெம். | 23 | 100 | சோனகதெரு, மீர். சேகப்பா பொ. எழுபட்டுமணிக்கோர்வை 1, முறுக்கு சவடிக்கொடி 1 |
| 72 | ,, | அக்டோபர் | 6 | 70 | கொட்டடி, ராம. வீரகத்தி பொன் அலைமாலை 1 |
| 78 | ,, | ,, | 7 | 50 | நீர்வேலியடி, க. நாகலிங்கம் பழுதுபட்ட பட்டணக்காப்பு சோ 1 |
| 121 | ,, | ,, | 23 | 200 | செட்டித்தெரு, அருளுழக்கைவேலுசெட்டி சிறவயிரத் தோடு சோ. 1, சிகப்புக்கல் தலை சோடி 1, சிகப்புக்கல் டிம்மி பதக்கம் 1 |
| 149 | ,, | ,, | 29 | 200 | புலோப்பளை, மூ. சின்னையா பொ. வொலிசு சோ. 1, கப்பிட்டுராணட்டியல் 1, நாலுநூல தட்டுமணிக்கோர்வை 1, இரண்டுநூல தட்டுமணிக்கோர்வை 1, நாட்டுக் கடுக்கன் சிறிது பெரிது சோ. 3 |
| 151 | ,, | ,, | ,, | 350 | சோனகதெரு, மூ. முகம்மது சுல்தான் மெய்தீன் பொன் எழுபட்டு மணிக்கோர்வை 1, கடசம் சோடி 1, கம்பிட்டுராணட்டியல் 1 |

விற்பனவு:— ௧௯௧௮ ஆ௵ நவம்பர்௴ ௧௯௳ பகல் ௧௦ மணிக்கு வீ. அ. ராம. ராமசாமிச்செட்டியார்கடையிலும், ௧௧ மணிக்கு சி. சு. சி. த. அண்ணாமலைச்செட்டியார் கடையிலுமிருந்து விற்கப்படும். அரு. செல்லையா உடையார், வெந்திஸ்மேஸ்தர்,

## விளம்பரம்.

தேவாலயங்களுக்கு உபயோகமான திறம் பட்டுக்குடைகள், ஆலவட்டம, கொடி, சுருட்டி, ஜாலா, மகரதோரணம், காவடிசகலாதது, முதலானவைகள் இந்தியாவில் சித்திரம்வல்லகைகாறர்களால செய்யப்பட்டு நமது சாய்பபில் சகாயமான கிரயத்திற்கு கொடுக்க விருக்கின்றன. இன்னும அவர் அவர்கள கேட்கும ஓடர்களுக்குத் தக்கமாதிரிதயாரித்துக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

இப்படிக்கு,
மூ. நாகலிங்கம் அன் சன்ஸ்
பறங்கித் தெரு,
யாழ்ப்பாணம்.

## JAFFNA CO OPERATIVE STORES LTD.

யாழ்ப்பாண
ஐக்கியவியாபாரசங்கம்.

இச்சங்கம், கொம்பனிக் கட்டளைச்சட்டப்பிரகாரம் பதிவுசெய்யப்பட்டது.

ஒருபங்கு நூறு ரூபாயுள்ள ஆயிரம் பங்குகள் கொண்ட ஒரு லட்சம் ரூபா முதலுள்ளது.

சங்கத்தின் நோக்கம்: அரிசி, நெல், புடைவை, காய், தானிய முதலிய பல சாமான்களிலும் வியாபாரம் நடத்தல்.

1918-ம் ஆண்டு ஆகஸ்ற் மாதம் 26-ந் திகதிக்குச் சரியாய் கிடமும் காலயுத்தி வருஷம் ஆவணி ௴ ௧௦௳ திங்கட்கிழமை காலமே சூரியோதயத்தில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்திலே வியாபாரத் தொழில் தொடங்கிக் கிரமமாகநடைபெற்றுவருகின்றது. இன்னும் 500 பங்குகள் விற்பனவுக்கிருக்கின்றன. விரும்பியவர்கள் சங்கத்தின் லேககருக்கு மனு அனுப்பும்படி கேட்கப்படுகிறார்கள்.

M. Asaipillai,
லேககர்,
J. C. S. Ltd,

## விளம்பரம்.

வல்லுவெட்டி கயித்திலிங்கம் கந்தையாவையும் பெண் பொன்னம்மாவுக்குச் சேட்டப்பிள்ளையும் நன்கொடையாகவுமுடைய பின்னாற் காணப்படுங்காணிகள் அளவுக்குடைய சிலகடன்களைத் தீர்ப்பதற்காக ௧௯௧௮-ம் ஆ கார்த்திகை மீ 16வ சனிக்கிழமை காலமே எட்டுமணிக்கு பிரசித்த ஏலத்தில் அந்தந்தக் காணிக்குள்ளிருந்து விற்கப்படும்.

காணிகள்:

௧. வல்லுவெட்டித்துறைக்குறிச்சி ஆனைவிழுந்தான் நிலப்பரப்பு 18¼ இதிலடக்குப்புறமாக நிலப்பரப்பு ௧௨ குளி ௧௨. தென்னைகள் பனைகளும். எல்லை:கிழக்கு வல்லிபுரம்மகன் சிவக்கொழுந்துவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு வல்லிபுரம்பெண் சின்னக்குட்டிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு ஒழுங்கை. தெற்கு ரேோட்டும் வல்லிபுரம்மகன் சிவக்கொழுந்துவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனமும். இவ்வெல்லைக்குட்பட்ட வைகள்யாவிலும் சொரியலாக அரைவாசி.

௨. டிஇறை ஆனைவிழுந்தான் நிலப்பரப்பு 1½. டிஆனைவிழுந்தான் நிலப்பரப்பு ௨௫. டிஆனைவிழுந்தான் வீடு ௮. ஆனைவிழுந்தான் வீடு ௮. ஆனைவிழுந்தான் நிலப்பரப்பு ௩இலு. ஆனைவிழுந்தான் நிலப்பரப்பு ௭இ. இவைகளில் முதலாமபிரிவில் வடக்குப்புறமாகப் பன்னிரண்டில் பதினொருபங்கும், மற்றப்பிரிவுகளில் தென்மேற்குப்புறமாகப் பதினாறில்பதின்மூன்று பங்கும் கூடியநிலப்பரப்பு ௧. குளி ௪௨ ௧௪/௧௬

எல்லை கிழக்கு வீரகத்தி செல்வநாயகத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம் வடக்கு வயிரமுத்து சின்னையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு ரேோட்டு. தெற்கு சீனிவாசகம் கைம்பெண் முத்துப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் கிட்டங்கி விருட்சம் முதலிய யாவிலும் சொரியலாய் அரைவாசியும்.

ச. செல்லத்துரை
லேலம்கூறுவோர் (ஒக்ஷன்மேஸ்டர்).

௧௯௧௮ம் ஆ கார்த்திகை மீ ௩௨௨

---

### யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை தானவரவு.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வித்தில காலம் ஆசிரியராயிருந்து இறந்து போன ஈராக்சனை ஸ்ரீ அ மாணிக்கத் தினபரமேஷ்ஷரியில் ஏமது சைவ பரிபாலன சபைக்கு வரித்தனுப்பிய ரூபா ௧ பெற்றும்.

சித. மு. பசுபதிசெட்டியார்,
தனாதிகாரி.

---


### பிரகடனம்.

பிள்ளையார்கதை (சுத்தப்பதிப்பு) விலை சதம் 12.

சோமவாரவிரத மான்மியம் தோத்திரத்திரட்டுடன் (புதியபதிப்பு) விலை சதம் 10.

மானேசர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,
வண்ணார்பண்ணை.


---


# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்: காலயுத்தி ஞு ஐப்பசி மீ ௨௯


---

## இலங்கை வித்தியாபரிபாலன அறிக்கைப்பத்திரம்.

இலங்கை வித்தியாகர்த்தர் மெஸ்டென்ஹாமவர்களால் ௧௯௧௭-ம் ஆண்டிற்கெழுதப்பட்ட இலங்கை வித்தியாபரிபாலன அறிக்கைப்பத்திரம் வெளிவந்திருக்கின்றது. இவ்வறிக்கைப் பத்திரத்தின்படி மேற்படி வருஷத்தில் ௧௯ பாடசாலைகள் உதவிநன்கொடைப் பணம் பெறும் பாடசாலைகளாகப் புதிதாய்ப் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. ௬௨ பாடசாலைகளில் பரீக்ஷை மாத்திரம் நடத்தப்பட்டிருக்கின்றது. இவைகளின் விருத்தி திருப்திகரமானதாயிருக்குமாயின், அரசாட்சியாரின் பொக்கிஷத்திலே நயப்படும் போது இவைகளுக்கும் உதவி நன்கொடைப்பணம் கொடுக்கப்படும். ௧௯௧௭-ம் ஆண்டில் இலங்கையிலே பாடசாலைகளுக்குச் சென்று கற்ற மாணவரின் தொகை ௬,௯௫,௮0௯. இவர்களுள் ௬,௯௭,0௬௬ பேர் அரசாட்சியார் பாடசாலைகளிலும் அரசாட்சியாரிடமிருந்து உதவிநன்கொடைப் பணம்பெறும் பாடசாலைகளிலும் கற்றனர், ௨௮,௭௭௯ பேர அரசாட்சியாரின் உதவியின்றி ஊரவர்களால் நடத்தப்படும் பாடசாலைகளில் கற்றுவந்தார்கள். ௧௯௧௬-ம் ஆண்டில் இலங்கையில் கற்ற மாணவரின் தொகை ௬,௯0,௬௪௪. ஆகவே ௧௯௧௬-ம் ஆண்டிலும் ௧௯௧௭-ம் ஆண்டில் ௫,௬௭௫ பேர் மேலதிகமாகப் பாடசாலைகளுக்குச் சென்று கற்றிருக்கிறார்கள். ௧௯௧௭-ம் ஆண்டில் நடைபெற்ற அரசாட்சியார் பாடசாலைகளின் தொகை ௮௬௪. இவைகளிற் கற்ற மாணவரின் தொகை ௩,௧௯,௭௧௨. ௧௯௧௭-ம் ஆண்டில் நடைபெற்ற அரசாட்சியாரின் பாடசாலைத்தொகை ௮௬௯. அவற்றில் கல்விகற்ற மாணவரின் தொகை ௩,௧௯,௪௬௨. ௧௯௧௬-ம் ஆண்டில் அரசாட்சியாரின் உதவிநன்கொடைப் பணம்பெற்று நடைபெற்ற பாடசாலைகளின் தொகை ௨0௪0. இவற்றில் கல்விகற்றமாணவரின் தொகை ௨,௪௪,௯௬௬. ௧௯௧௭-ம் ஆண்டில் அரசாட்சியாரின் உதவிநன்கொடைப் பணம்பெற்று நடைபெற்ற பாடசாலைகளின் தொகை ௨0௯௯. இவற்றில் கல்விகற்ற மாணவரின் தொகை ௨,௪௭,௯0௪. ஆகவே மேற்படி வருஷத்தில் ௫ அரசாட்சியார் பாடசாலைகள் மேலதிகமாக ஏற்படுத்தப்பட்டு ௨௭௨0 பிள்ளைகள் அவற்றில் மேலதிகமாகக் கற்றுவந்திருக்க, உதவிநன்கொடைப்பணம் பெற்று நடைபெற்ற பாடசாலைகளில் ௪ பாடசாலைகள் குறைந்துபோக ௫,௬௭௫ பிள்ளைகளிவற்றில் மேலதிகமாகக் கற்றுவந்திருக்கின்றனர்.

பாடசாலைகளுக்குச் சென்று கல்வி கற்கும் மாணவரின் தொகை வரவர அதிகப்படுகின்றதென்பது மேற்படி கணக்காலினிது விளங்கக்கிடக்கின்றது. குறிக்கப்பட்ட வயசுக்குள் சகல பிள்ளைகளும் பாடசாலைகளுக்குச்சென்று கறகவேண்டுமெனப் பலவிடங்களிலுங் கட்டாயப்படுத்தப்பட்டு வருகின்றமையாலேயே பாடசாலைகளுக்குச் சென்று கறகும் மாணவரின் தொகை வரவர அதிகப்படுகின்றதென வித்தியாகர்த்தரவர்கள் கூறுகின்றனர். சகல பிள்ளைகளும் பாடசாலைகளுக்குச் சென்று கற்கவேண்டுமென்னும் பிரமாணம் இன்னும் பலவிடங்களில் ஏற்படுத்தப்படவில்லை. இது எங்கும் ஏற்படுத்தப்பட்டுச் சரிவர நடைபெறுமாயின் பாடசாலைகளின் தொகையும் அவற்றில் கற்கும் மாணவரின் தொகையும் மதிகப்படும்.

வித்தியாகர்த்தரவர்கள் மேற்படி அறிக்கைப்பத்திரத்தில் உயர்தரக் கல்வியைப் பற்றிக் கூறுமிடத்து இலங்கையிலே உயர்தரக் கல்வி விருத்தியாகவேண்டுமென்பதும், ஓர் சர்வ கலாசாலைக் கல்லூரி யிங்கு ஸ்தாபிக்கப்படவேண்டுமென்பதும் சகலருக்கும் சம்மதித்த அபிப்பிராயமென்றும், ஆகையால் [illegible] கல்லூரியை இப்போது அரசாட்சியாரின் கல்லூரி (Royal College) நடைபெறும் இடத்திலேயோ, அல்லது உபாத்திமார் கல்லூரி (Training College) இப்போது நடைபெறுமிடத்திலேயோ அல்லது குதிரைப்பந்தயம் நடந்துவருமிடத்தில் ஓர் புதிய ஸ்தானத்திலேயோ கட்டலாமென ஆலோசிக்கப்பட்டதென்றும், ஆனலிப்போது மேற்படி புதியஸ்தானத்தில அதாவது குதிரைப்பந்தயம் நடக்குமிடத்தில் அரசாட்சியார் கல்லூரியைப் புதிதாய்க் கட்டவும், அரசாட்சியார் கல்லூரிக்கட்டடத்தோடு சில அறைகளைப் புதிதாயக் கட்டி அதிலே சர்வகலாசாலைக் கல்லூரியை நடத்திவரத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றதென்றும் கூறியிருக்கின்றனர். இச்சர்வகலாசாலைக் கல்லூரி விரைவில் ஸ்தாபிக்கப்பட்டு நடைபெற்றுவருமென்றே நினைக்கின்றோம். ஆயின் நமக்கு இன்றியமையாது வேண்டியிருப்பது ஓர் சர்வகலாசாலைக்கல்லூரியன்று, ஓர் சர்வகலாசாலை (University)யே யாகும். இந்தியாவிலே மைசூர் பரோடா முதலிய சிற்றரசுகளிற்றானும் சர்வகலாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டு நடைபெற்றுவர இவ்விலங்கையில் ஓர் சர்வகலாசாலை இன்னும் ஸ்தாபிக்கப்படாதிருப்பது பெரிதும் துக்கப்படத்தக்கதே.

---

## சமாச்சாரம்.

பனை மணியவேலை:—கரைச்சி மணியகாரன் ஸ்ரீ. C. செல்லையா அவர்கள் பனை மணியகாரனாக நியமிக்கப் பட்டிருக்கின்றனர்.

ஓர் புதியநோத்தாரிஸ்:—ஓர் சுப்பிறீங்கோட் பிறக்தரும் யாழ்ப்பாணம் டெப்பியூற்றிப் பிசுக்கால் ஸ்ரீ. ச. சபாரத்தின முதலியாரவர்களின் மருகருமாகிய ஸ்ரீ. வேலுப்பிள்ளை மாணிக்கவாசகரவர்கள் யாழ்பாணப் பகுதிக்கு ஓர் நொத்தாரிசுவாக நியமிக்கப் பட்டிருக்கின்றனர். இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் தமது வேலையை நடத்துவார்.

வண்ணார்பண்ணைத் தபால் ஆபீசுக் களவு:- வண்ணார்பண்ணைத் தபால் ஆபீசில் 800 ரூபா வரையில் களவு போய்விட்டதெனை முன் அறிவித்தோம். இக்களவைப் பற்றிப் பொலீசர் விசாரணை செய்த போது மேற்படி தபால் ஆபீசுத் தலைவரிலும் ஓர் கொல்லனிலும் சந்தேகங்கொண்டு அவர்களைப்பிடித்தடைத்திருக்கின்றார்கள். இக்களவிற் சம்பந்தப்பட்டவராக எண்ணப்படும் வேறொருவர் மூடிப்புறச் சாட்சியாகினமையால் விடுதலையடைந்திருக்கின்றனர்.

விவாகம்:—சண்டிருப்பாய் பிறக்தர் ஸ்ரீ. K. பொன்னுச்சாமியவர்களுக்கும், திரிகோணமலை காணிப்பதிவு வக்தோரத் தலைவர் ஸ்ரீ. V. R. அருணாசலமவர்களின் சிரேஷ்ட புத்திரி மாது ஸ்ரீ. ராஜேஸ்வரியம்மாளுக்கும் இந்த நவம்பர் மீ 9வ நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் விவாகம் வெகு சிறப்பாய் நடைபெற்றது. தம்பதிகளிருவரும் சுகவாழ்வெய்தி நீடூழிவாழச் சிவபிரான் திருவருள் புரிவாராக. கடித.

—யாழ்ப்பாணம் உபஅதவிஎசன்றர் ஸ்ரீ. P. C. நிக்கலஸ்முதலியாரவர்களின் இரண்டாம்புத்திரி ஸ்ரீமதி பாக்கியவதியம்மாளுக்கும், ஹெட் ஓவசியராயிருந்து இளைப்பாறியிருக்கும் வட்டுக்கோட்டை ஸ்ரீ. S. வேலுப்பிள்ளையவர்களின் புத்திரனும் யாழ்ப்பாணத்தில் இப்போது ஓர் அளவு உத்தியோகஸ்தர (Surveyor) யிருக்கும் ஸ்ரீ. சின்னத்தம்பியவர்களுக்கும் இந்த நவம்பர் மீ 9வ நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் விவாகம் வெகுசிறப்பாய் நடைபெற்றது. மணமகனும் மணமகளும் சகல ஐஸ்வரியங்களும் பெற்று நீடூழிவாழ்வாராக.

மரணம்:—தொடுவாய் இராச்சியப்பகுதியைச் சேர்ந்த கிளாங் என்னுமிடத்தில் ஹெட்ஓவசியராயிருக்கும் ஸ்ரீ. எஸ். கந்தவனமவர்களின் மனைவியும் யாழ்ப்பாணம் பிசுக்காலாபீசில் ஆராய்ச்சி உத்தியோகத்தி லமர்ந்திருக்கும் ஸ்ரீ. இ. பொன்னம்பலமவர்களின் அருமைப் புதல்வியுமாகிய மாது ஸ்ரீ. நீலாயதாட்சி அம்மாள் கார்த்திகை பிரகாரம் தமது கணவனின் உத்தியோகஸ்தானத்திலே இப்போது பரவிய நவீனசுரத்தாற் பீடிக்கப்பட்டு இறந்துவிட்டனர். இவர் நற்குண நற்செய்கையுள்ள ஓர் உத்தமி.

தற்கொலை:—எழுதுமட்டுவாள் தெற்கிலே நாற்பது வயதுப்பிராயமுள்ள ஒருவன் கழுத்தில் கயிற்றை மாட்டித் தூங்கி யிறந்து விட்டனன்.

பீராக் சுலுத்தானவர்களின்மரணம்:—பீராக் சுலுத்தானவர்கள் இப்போது பரவும நவீன சுரத்தாற பீடிக்கப்பட்டு இறந்துவிட்டன ரென்னுஞ் செய்தி வந்திருக்கின்றது.

---

## தந்திச் சமாச்சாரம்.
### (யுத்தசங்கதிகள்.)

(சிலோன் "அப்சேவர்" பத்திரிகையிலிருந்து மொழிபெயர்க்கப்பெற்றன.)

### ஐரோப்பியயுத்தம் முடிவுற்றது. ஜர்மனியர் சமாதானமாயினர். கெயிசர் சிம்மாசனத்தினின்றும் விலகினர். ஜர்மனியில் பிரசாதிபத்தியமுறை அனுசரிக்கப்பட்டது.

நவம்பர் மீ 7வ.

இவ் வாய்க்காலில ஜர்மனிய கடற்படையின் கலகம்: புதிய ஜர்மனிய அரசாங்கத்தாருக்குமாறுகக் கடற்படையின் தமையினுலேயே கல்வாய்க்காலிற் பெருங்கலக முண்டாயது. உத்தியோகத்தர்கள் இங்கிலாந்தைக் கடற்படை கொண்டு [illegible] இதனை ஜர்மனிய கப்பற்காரர்களும் கடற்படை வீரரும் அறிந்து உத்தியோகத்தரை அங்ஙனஞ் செய்யவொட்டாது தடுக்கமுயன்றபோது கலகம் ஆரம்பித்தது கப்பற்காரர்கள் ஹம்பேர்க்கிலுள்ள உத்தியோகத்தரை யடக்கி கப்பல்களில் சிவப்புக்கொடி கட்டித்தூக்கினர். போர்வீரர்சங்கமொன்றகட்டி யந்திரத்துப்பாக்கி யுத்தஞ் செய்து கொம்மாண்ட்ரோ என்னுமிடத்தைப்பிடித்தனர். கப்பற்காரரைகொண்ட 150000 கலகக்காரர் பண்டஸ்ராதிஸ் என்னுமிடத்திற்குச் சென்று போர்வீரர்களை எதிர்த்தனர். இருபாலாருக்கு மிடையே யுத்தமுண்டாயது ஹம்பேர்க் கடற்படைத் தலைவராகிய அல்ரேஞ் என்பவர் கலகக்காரருடைய நிபந்தனைகளுக் குட்படவேண்டியவரானார். இப்பொழுதும கலகம் நடக்கின்றது. (பிந்தியசமாச்சாரம்) ஜர்மனியசப்மறயின் கப்பற்காரரும் கலகக்காரரைச சேர்ந்துவிட்டனா.

நவம்பர் மீ 8வ.

யுத்தத்தை நிறுத்தல்—ஆங்கில பிரான்சிய தத்துவராசரியப் பகுதியார் யுத்தம் நிறுத்துதற்சேற்ற நிபந்தனைகளை வரைந்து அவற்றை அங்கீகரிப்பதோ அன்றேல் மறுப்பதோ என்னும்முறை 72 மணித்தியாலத்துள் தங்கட்குத் தெரிவிக்கவேண்டுமென ஒரு நிருபம ஜர்மனிக்கு அனுப்பினர். முடிவு சொல்லவேண்டிய நேரம் திங்கட்கிழமை காலை 11 மணிக்குமுன்.

ஜர்மனியமந்திரி சமாதானத்தைக் குறித்துப் பிறவூர்களிலிருக்கும் ஜாமனிய சனங்கட்கு விடுத்த விளம்பரம:—"இந்நாட்களில் அந்நியதேசத்திலிருக்கும் நம்மவர்கள் அதிகம் கஷ்டமுறுகின்றனர். ஜாமனியரில் நீவிர் நம்பிக்கையீனங்கொள்ளவொண்ணாது. உலகத்திலுள்ள எவராவது எக்காலத்திலுஞ் செய்யாத யுத்தத்தை நம் போர்வீரர் துணிவுடன் இதுகாறுமின்று செய்தனர். இங்குள்ளவர் மிகவும் பொறுமையுடனிருந்தார்கள். ஆனல் 5-ம் வருடத்தில் எங்களுடன் கூடிய மற்றும இராசரியங்கள் எங்களை விட்டு விலகிக்கொண்டமையால், பகைவர்கட்கு வல்லமை அதிகமுற அவர்களுடன் நின்று சமர்செய்தல் கஷ்டமாயிற்று. நாங்கள் காத்திருந்த வெற்றி எங்கட்குக் கிடைக்கவில்லை யானுலும் வல்லமையுள்ள பக்கமே ஜெயம்பெறுமென்பதை ஜர்மனியர் உணர்ந்துள்ளனர். இப்போதைக்கு நாங்கள் யுத்தத்தை நிறுத்தி இன்னும் இராசரியத்திற்காக வேண்டிய விஷயங்களைக் கவனிப்போம். நீங்களும் அப்படியே செய்வீர்களாக."

ஜர்மனிய தூதுவர் சமாதானப் பேச்சின்பொருட்டுப் பிரான்சிற்கு வந்தபோது அசின் என்னுமிடத்தில அங்கில பிரான்சிய உத்தியோகஸ்தர்களால் நன்கு உபசரிக்கப்பெற்றனர்.

ஜர்மனிய ராசகுமாரனுகிய பிறின்ஸ மாய்க்ஸ் என்பவர் தன்னுடைய வேலையினின்றும் விலகுவதாகத் தெரிவித்தனர். ஆனல் அது அங்கீகரிக்கப்படவில்லையாம்.

ஜர்மனிய பார்லிமென்ற் அங்கத்தவர்கள் மார்சல் வொக்ஸ் என்னுஞ் சேனாதிபதியைக் காணும்படி பிரான்சிய யுத்தமுனைக்குச்-சென்றிருக்கின்றனர்.

நவம்பர் மீ 9வ.

கெயிசர் சக்கரவர்த்தி சிமாசனத்தினின்றும் விலகிக்கொள்ள நிச்சயித்துவிட்டனராம். இப்பொழுது அவர் பெர்லினகருக்குச் சென்றிருக்கின்றனர்.

ஜர்மனியா சோஷியலிஸ்டுக்கட்சியின் தலைமையில் ... ஜர்மனியா சோபின்னனுங்கப்பலைத் துருக்கியர்வசமே விட்டுவிட்டனர்.

நவம்பர் மீ 10வ.

நவம்பர் மீ 9வ காலை ஜர்மனிய சக்கரவர்த்தியாகிய கெயிசர், தமதுமூத்தமகனுகிய கிறவுன்பிறின்ஸ் முன்னிலையிலும், வொன்றுஹின்டன்பேர்க் முன்னிலையிலும் தாம் ஜர்மனியராசரிய பரிபாலனத்தினின்றும் விலகிக்கொள்வதாகக் கைச்சாத்திட்டனர். கைச்சாத்திடும்போது கெயிசர் மனந்தளர்ந்து "ஜர்மனியின் நன்மையின் பொருட்டாகவிருக்கட்டும்" என்று கூறினராம்,

ஜர்மனியில் முதல் பவேரியாவிலும் பின்னர் ஜர்மனி முழுவதிலும் பிரசாதிபத்திய இராசரிய முறை அநுசரிக்கப்பட்டது.

நவம்பர் மீ 11வ.

கெயிசர் சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் பரிவாரத்தினரும ஜர்மனியை விடுத்து மோட்டோர்ரதமார்க்கமாக ஒல்லாந்துநாட்டை யடைந்தனர்.

நவம்பர் மீ 11 காலை 5 மணி நேரத்தில் ஜர்மனிய சமாதானப் பத்திரம் கைச்சாத்திடப்பட்டதென்றும், அன்று பகல் 11 மணியில் ஜர்மனியருடன் செய்த யுத்தம் நிறுத்தப்பட்டதென்றும், அங்கில முதன்மந்திரி தெரிவிக்கின்றார்.

---

## சோமவாரவிரத மான்மியம்.

(சென்ற பத்திரிகைத் தொடர்.)

இங்ஙனம் பார்ப்பனச் சிறுவர் சொல்லுதலும், அவ்வரசன் மனமகிழ்ந்து அலங்காரஞ்செய்பவர்களை வருவித்துச் சாமவானைப் பெண்ணுருவாக அலங்கரிக்கும்படி கட்டளை செய்தான். அலங்காரஞ் செயவோர், கண்டோரெவரும் பெண்ணென்பதிற் சிறிதுஞ் சந்தேகமுறா வண்ணம் அழகுறச் சாமவானை அலங்கரித்து அரசன்முன்னிலையிற் கொண்டுபோய் விடுத்தனர். அரசனும் போலிவேடமோ உள்ளபடி பெண்தானோ என்று சந்தேகங்கொண்டான். அவ்விருவரும் தம்பதிகளென வேடம்பூண்டு சீமந்தினியிடம் செல்லும்போது கண்டோரெல்லாம் சாமவானை உண்மையான பார்ப்பனச் சிறுமியென மதித்து அவன் அழகைமெச்சினார்கள். சுமேதாவும் பெண்வேடம்பூண்ட சாமவானும சீமந்தினியிடஞ் செல்லும் மற்றும் பார்ப்பனிகளுடன் கூடிக்கொண்டு போனார்கள். எல்லோருஞ் சீமந்தினியின் மாளிகையை அடைந்தார்கள். வந்தவந்த பிராமணரையும் அவர்கள் பன்னியரையும் முறையே சிவபிரானாகவும் உமாதேவியாராகவும்பாவித்து அவள் பூசித்து அவர்களுக்கு வேண்டிய திரவியத்தையும் பிறவற்றையுங் கொடுத்தாள். சுமேதாவும் பெண்வேடம்பூண்ட சாமவானும் அவள் முன்னிலையிற் போய் நின்றார்கள். சீமந்தினி அவ்விருவரும் ஆண்பிள்ளைகள் என்பதை உணர்ந்து புன்முறுவல்செய்து அவர்களைச் சிவபிரானாகவும் உமாதேவியாராகவும் பாவித்துப் பூசித்துப் பால் பழம் தேன் இளநீர் கருப்பஞ்சாறு முதலியன அவ்விருவருக்கும் அருந்தும்படி கொடுத்து வேண்டியதிரவியத்தையும ஆடையாபரணங்களையும் தானஞ்செய்து அவர்களைத் தங்கள் ஊருக்குப் போகும்படி விடைகொடுத்தாள்.

அவ்விருவரும் தன் ஊரை நோக்கிச் செல்லும் போது வழியிலே பெண்வேடம்பூண்ட சாமவான் தன்தோழனுகிய சுமேதாவை நோக்கி "என்னுயிர்த்துணைவரே, நீர் என்னைமணஞ்செய்யவேண்டும். அதற்கு மறுப்பீராயின் இப்பொழுதே என்னுயிரை விடுவேன்; பெண்பழி உம்மை விடாது" என்றான். சுமேதா தன் நண்பன் விநோதமாக இப்படிப் பேசிக்கொண்டு வருகின்றான் என எண்ணி அவனுக்குப் பதில் சொல்லாமல் சிறிது தூரஞ் சென்றான். சாமவான் மீட்டும் சுமேதாவைப் பார்த்து "எனது துணைவரே, யான் உம்மீது காதல்கொண்டேன். என்காதலைத் தீர்த்தன்றி அப்பாலே செல்லாதீர். பெண்களாக ஒன்றை வேண்டியகாலத்து அதற்கு இசையாதுபோதல் ஆடவருக்கு அழகாகமாட்டாது. என்னை மேன்மேலும் துன்பப்படுத்தாதீர்" என்றான். சுமேதா சாமவான் கூறும் வார்த்தையிற் சந்தேகங்கொண்டு சிறிது உற்று நோக்கினன்; என்ன ஆச்சரியம்! மகாலக்குமியை ஒத்த ஒருபார்ப்பனக் கன்னிகை தன்பக்கத்தில்நிற்கக் கண்டான். கண்டவன் "பெண்ணே, என்தோழனுடன் இக்காட்டுமார்க்கமாய்வந்தேன், அவனைக் காணகிலேன், உன்னைக் கண்டேன், நீ யார், இங்கே வந்த காரணமென்ன" எனக்கேட்டான். அப்பார்ப்பனக் கன்னிகை சிரித்து "என் துணைவரே கேளும், நான் பெண்வேடம்பூண்டு உம்முடன் கூடிவந்த தோழனுகிய சாமவான், சீமந்தினி பாவனையால் உள்ளபடி பெண்ணானேன், என் விதி இதுவாயிற்று. என்னை இனிமேற் சாமவதி என்று சொல்லுதிர். என்மேற் சந்தேகங்கொள்ளாதீர். பெண்மைக்குரிய அடையாளங்களை நீரே நேரில் என் உடம்பிற் பாரும். உம்மையன்றிப் பிறரை யான் விவாகஞ்செய்ய உடன்படேன்" என்றான்.

இவையனைத்துங் கேட்ட சுமேதா ஏக்கங்கொண்டு "ஐயையோ, என்செய்வோம், அரசனுடைய வஞ்சனையால எமக்கு இக்கேடுசம்பவித்தது. எங்கள் தந்தையர் அறிந்தால் எம்மைத் தண்டிப்பார்களே, கலையெலாம உணர்ந்த சாமவான் கணப்பொழுதிற் கன்னிகையாயினனே, இதனை யறிந்தால் இவனது பெற்றோர் மனம் என்னபாடுபடும்" என்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டு பின்னர்ச் சாமவதியைநோக்கி "பெண்ணே, நீ அவசரப்படவேண்டாம். நாங்கள் எங்கள் பெற்றோரிடம்போய் எங்களுக்கு நேர்ந்த விபத்தைச் சொல்லுவோம், பின் அவர்கள் ஆஞ்ஞைப்படி நடத்துகொள்வோம்" எனக் கூறிச் சாமவதியுடன் தங்கள் நாட்டை நோக்கிச் சென்றான்.

சுமேதா சாமவதியுடன்போய் வாடியமுகத்தனுய்த் தன் பிதாவின்முன்னர் நிற்றலும், பிதா அவனைப்பார்த்து "மகனே, நீ மாட்டுமுடன்வந்து நிற்பதென்ன? இந்தப்பார்ப்பனச்சிறுமியார்? எல்லாவற்றையும் ஒளியாமல் எனக்குச் சொல்லுதி" என்று கூறுதலும் அப்பொழுது சுமேதா சாமவானுடன் தான் விதர்ப்பராசனிடஞ் சென்றமையையும், அவனுடைய ஆணைக்கு அஞ்சிப் போலிவேடம்பூண்டு சீமந்தினியிடம் இருவரும் போனமையையும், சீமந்தினி பாவனையால் சாமவான்

உள்ளபடி பெண்ணானமையையும், தன்னை விவாகஞ்செய்யும்படி பலாத்காரஞ் செய்தமையையும், தான் பிதாவின் அநுமதிபெற்று அப்படிச் செய்வதாகச் சொல்லிச் சாமவதியைக் கூட்டிக்கொண்டுவந்தமையையும் விபரமாகச் சொன்னான். வேதமித்திரன் தன்பிள்ளை சொல்லிய செய்தியை உடனே சாமவானுடைய பிதாவாகிய சாரசுதனுக்குச்சொன்னான். சாரசுதன் தன்னுடைய அருமந்தமகன் கன்னிகையாக மாறியிருக்கக் கண்டமாத்திரத்தில் "இவையெல்லாம் விதர்ப்ப நாட்டு அரசனுடைய வஞ்சனையினாலேதான் வந்தன" என்றுசொல்லிக்கொண்டு அடக்காத கோபமுடையவனாய்த் தன்பிள்ளையைக் கையிற்பிடித்துக்கொண்டு சீக்கிரமாக விதர்ப்பநாட்டுவேந்தன் முன்பு போய் "அரசனே, யாராவது ஏழைகள் பொருளைவேண்டி உன்னிடத்தில் வந்தால், நீ உனக்கு இஷ்டமானாற் கொடுக்கலாம்; இல்லையிற் போ, என்று சொல்லலாம், அவற்றைவிட்டுச் சோமவாரத்தை அநுட்டிக்கின்ற சீமந்தினியிடம் என் பிள்ளையைப் பெண்வேடம்பூண்டு போகும்படி செய்யலாமா? அப்படிச்செய்தமையினாலல்லவா என்மகன் இந்தக்கோலத்தை அடைந்தான்; ஏ அறிவில், என் பிள்ளையை மணமகனாகக் கண்டுமகிழ எண்ணியிருந்த நான் இந்தக் கோலத்தைக் கண்ணாற் பார்ப்பேனோ? சிசீ, நீயும் அரசனென்று கிரீடந்தரித்துக் கொண்டிருக்கின்றாயே! எத்தனைத் தவத்தைச் செய்து இந்தப்பிள்ளையைப் பெற்றோம். எவ்வளவு பிரயாசைப்பட்டு இப்பிள்ளையைப் படிப்பித்தோம். மணஞ்செய்யும்படி பொருளுக்காக உன்னிடம் வந்தபிள்ளைக்கு நீ இப்படிச் செய்யலாமா? என்மகனைப் பெண்ணாக்கி எங்களையும் நரகசிறையிலிட்டாயே; ஆ, பாதகா, என் பிள்ளையை இந்தக்கோலத்துடனே பார்த்துக் கொண்டு இருக்கமாட்டேன், நானும் என் மனைவியும் இதோ உயிர் விடுகிறோம். அந்தப்பழி உன்னைப்பீடிக்கட்டும்" என்று இடியிடித்தாற்போலச் சொன்னான்.

இவையனைத்தையுங் கேட்ட அரசன் நடுநடுங்கி ஏக்கங்கொண்டு சிம்மாசனத்திலிருந்து கீழே அடியற்ற மரம்போல வீழ்ந்து சிறிது நேரம் மூர்ச்சையாகிப்பின்னர், ஒருவாறு தேறித் தன் பக்கத்தில் இருந்த முனிவர்களைநோக்கி "தவத்தில் மேம்பட்ட முனிவர்களே, நீங்கள் இந்தப் பிராமணர் சொல்லிய செய்தி முழுவதையுங் கேட்டுக்கொண்டிருந்தீர்கள், சீமந்தினியின் விரதவைராக்கியத்தால் இப்பார்ப்பனச் சிறுவன் இக்கோலத்தையடைந்தான். இந்தப்பெண்கோலம் நீங்கிப் பழையபடி இவன் ஆணாதற்கு என்னால் என்னசெய்யவேண்டுமோ அதனை உடனே செய்கின்றேன் சொல்லுங்கள்" என்று அழுது சொன்னான். அரசன் இப்படிச்சொல்லலும் அந்தமுனிவர் கூட்டத்திலிருந்த பாரத்துவாச முனிவர் அதனைப்பார்த்து "அரசனே, சிவாபராதத்திற்கு எளிதிற் பிராயச்சித்தம் கிடையாது. ஆனாலும் ஒன்று சொல்லுகிறேன் கேள், என்ன பாதகத்தைச் செய்தவர்களும் சர்வலோக மாதாவாகிய மனோன்மணியை அன்புடன் பூசிப்பாராயின் அப்பாதகம் சூரியனைக்கண்ட இருளைப் போல அவர்களைவிட்டு நீங்கும், ஆதலினாலே அரசனே, எனக்குக்கிட்டவா, இந்த மந்திரத்தைக் கேள், இதனை உச்சரித்துக்கொண்டு தேவியை அன்புடன் பூசைசெய்வாயாயின் அவள் உன் முன்தோன்றி உனக்குவேண்டிய வரங்களைத் தருளுவாள்" என்றார். அரசனும் அந்தமந்திரத்தைக் கேட்டுக்கொண்டு தேவியாலயத்தை அடைந்து அதைஉச்சரித்து அன்புடன் பூசை செய்தான். தேவியும் அவனுக்குப்பிரசன்னமாகி "அரசனே, வருந்தற்க, உனக்குறையாது? உரைத்திடு" என்னலும், அரசன் உச்சிமேற்கைகூப்பி அழுதுகொண்டு "தாயே, சீமந்தினி பாவனையால ஒருபார்ப்பனச் சிறுவன் பெண்ணானான்; அதனை நீக்கியருளவேண்டும்" என்றான். அப்பொழுது தேவி புன்முறுவல்செய்து "வேந்தனே, சிவனடியவர்களின் கருத்துக்கு மாறாக எம்மால் மாத்திரமன்று, எம்மிறைவராகிய பெருமானாலும் யாதுஞ்செய்ய முடியாது, ஆதலால், இதனையொழித்து வேறியாதும் வரம்வேண்டுமேற் கேட்குதி தருதும்" எனத்திருவாய்மலர்ந்தாள். அதற்கு அரசன் "என்னம்மே, அப்படியாயின் இச்சாரசுதன் இன்னுமோர் புத்திரனைப் பெறுதற்குத் திருவருள்செய்தல் வேண்டும்" என்றிரந்தான். அப்பொழுது என்னையாளுடையிறைவி திருவுளமகிழ்ந்து "அங்ஙனமாகுக; அன்றியும் வேந்தனே, சாமவதியைச் சுமேதாவுக்கே நீ மணம் முடித்து வைத்தல்வேண்டும்" எனத் திருவாய் மலர்ந்து மறைந்தருளினள். அரசன் தேவியின் ஆஞ்ஞைப்படியே சுமேதாவுக்கும் சாமவதிக்கும் மணம் நிறைவேற்றி வைத்தான். அவர்கள் சகல போகங்களையும் அநுபவித்துக்கொண்டு நெடுங்காலம் வாழ்ந்தார்கள். சாரசுதனும் பின்னர் ஒரு புத்திரனைப்பெற்றுவாழ்ந்தான். சீமந்தினியும் பலகாலமாய்த் தன்நாயகனுடன் சுகித்துவாழ்ந்து பின்னர் சிவகதியை யடைந்தனள்.

இச் 'சோமவாரவிரதமான்மியம்' பிரமோத்தர காண்டம், திருவிளையாடற்புராணம் என்னுமிவற்றை யாதாரமாகக்கொண்டெழுதப்பெற்றுள்ளது. சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இதனை, சைவசமயிகள் அனைவரும் இந்நூலிற்சொல்லிய பிரகாரம் தம்மால் இயன்றளவிற்கு வைராக்கியமாக அநுஷ்டித்து இகபரசுகங்களைப் பெற்று இனிது வாழ்வாராக.

## திருவண்ணாமலைத் தீபதரிசனம்.

அகண்டாகார சச்சிதானந்த பரிபூரண சுயம்பிரகாசப் பொருளாய் விளங்குஞ் ஸ்ரீ கயிலாயபதியானவர் இந்த உலகத்திலுள ஆகாசமிருக்கும் ஆன்மகோடிகளுய்யும்பொருட்டுத் திருக்கோயில் கொண்டிருக்கின்ற பல ஸ்தலங்களுள், திருஞானசம்பந்தசுவாமிகள், திருநாவுக்கரசுசுவாமிகள், சுந்தரமூர்த்திசுவாமிகள், மாணிக்கவாசகசுவாமிகள் என்னும் இந்நால்வர்களருளிச்செய்த தேவார திருவாசகங்களை உடையனவாய்ச் சோணாடு முதலிய தேசங்களில் இன்ன இன்ன நாட்டில் இத்தனை இத்தனை ஸ்தலங்களென்று முன்னோர்கள் எடுத்துரைக்கும் முறைப்படியே நடுநாட்டுக்குள்ளிருக்கும் ஸ்தலங்களுள் விசேஷமாகிய திருவண்ணாமலை யென்னுந் திருப்பதியும் ஒன்று.

இது கிருதயுகத்தில் அக்கினிமலையாகவும், திரேதாயுகத்தில் மாணிக்கமலையாகவும், துவாபரயுகத்தில பொன்மலையாகவும், கலியுகத்தில் கல்மலையாகவும் திருவுருக்கொண்டு, அருணாசலம், சோணாசலம், கௌரிநகரம், தேசநகரம், முத்திநகரம், ஞானநகரம், சிவலோகம் என்பன வாதியாகப் பல பெயர்களை யுடைத்தாய், சிவபெருமானே கிரிரூபமாய் இருக்கப்பெற்றதாய், பார்வதியார் திருவவதாரமானதும், திருக்கண் புதைத்ததும், மகிடாசுர மர்த்தனஞ்செய்ததும், இடப்பாகம் பெற்றதும், சந்திரவம்சத்தனாகிய வச்சிராங்கத பாண்டியன் பேறுபெற்றதும், அக்கினிவம்சத்தனாகிய வல்லாளராஜன் புத்திரசோகம் தீர்த்ததும், இந்திரதீர்த்த முதலாகிய அநேக தீர்த்தங்களுள்ளதும், ஆதித்தனுக்குத் தரிசனங் கொடுத்ததும், சூரியவம்சத்தனாகிய பிரதத்தராசனால் அநேக காணிக்கைகள் பெற்றதும், அஷ்டவசுக்கள் பிரமன் முதலானவர்கள் பாவந்தீர்ந்ததும், புளகாதிபன் பேறுபெற்றதும், அன்பர்கள் தவம்புரிந்து நற்கதியடையப்பெறுவதும், நினைக்க முத்திதருந் தலமென்றும் புராணத்திற் சொல்லப்படுவதுமாய ஒப்பற்ற தலமாம்.

பரமசிவம் மலையுருவானதற்குக் காரணம் யாதெனில், ஒரு கற்பத்தில் மகாவிஷ்ணுவும் பிரமதேவரும் தாம் தாம் பிரமமென்று வாதித்துப் போரிட்டதைத் தீர்க்கும்பொருட்டுச் சிவபெருமான் அக்கினிமலையாய் அவர்கள்மத்தியில்நின்று கலகத்தைத் தீர்த்தருளி அவர்கள் வேண்டுகோளினால் ஒரு சிறிய மலையாயுருக்கொள்ள, அதைக் கண்ட பிரமதேவரும் மகாவிஷ்ணுவும் சுவாமியை நோக்கி இம்மலையினுச்சியில ஒரு சோதி என்னாளும் தெரியும்படி கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குச் சிவபெருமான் அங்ஙனமாகுகவென்றருளினார்.

கார்த்திகைமாசத்தில்வரும் கார்த்திகைநட்சத்திரத்தில் இம்மலையினுச்சியில் ஒரு சோதி காண்பிப்போம். அச்சோதியைத் தரிசித்தவர்கள் தரித்திரமும் வியாதியும் நீங்கி இஷ்டகாமியங்களைப் பெற்றுவாழ்வார்கள். இவையல்லாமல் அரசர்களும் தவசிகளும் தரிசிப்பார்களாயின் இடையூறின்றி வாழ்வார்கள். அன்றியும் இதைத் தொழுதவர்களும் தரிசித்தவர்களுமே யல்லாமல் அவருடைய கோத்திரத்தில் இருபத்தொரு தலைமுறைக்கும் மோக்ஷங் கொடுப்போம் என்று திருவாய் மலர்ந்தருளினர்.

மேலும் இம்மலை ஜெனனமரணமென்னும் வியாதிக்கு மருந்துபோல இருப்பதினால் மலைமருந்தென்றும் அழல்வண்ணமாயிருப்பதினால் அருணாசலமென்றும் பெயர் பெறக்கடவது. இந்நாமத்தை ஒருதரம் சொன்னவர்க்குப் பஞ்சாட்சரத்தை மூன்றுகோடிதரம் உச்சரித்த பலன் வருமென்றும் அருளிச்செய்தார்.

அதற்குப் பிரமாவும் மகாவிஷ்ணுவும் ஆனந்தமடைந்து சிவபெருமானைப் பார்த்துத் தேவரீர் இவ்வாறு மலைக்கோலமாயிருந்தால் அடியேங்கள் எப்படிப் பூசைசெய்யக்கூடும். ஆகையால் இந்த மலையின்கீழ் ஒரு சிவலிங்க மூர்த்தியாயெழுந்தருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். சிவபெருமான் அப்படியே சிவலிங்க மூர்த்தமாவோமென்று அந்த மலையினுள்ளே மறைய, உடனே அம்மலையினிடத்தில் சிவலிங்கந் தோன்றியது. அதைக்கண்டு பரமானந்தராய் மயனென்னுந் தேவதச்சனால் ஓராலயங் கட்டுவித்தார்கள். அப்போது அந்த இடத்தில் வளப்பம்பொருந்திய நகரமும் மூன்று தீர்த்தங்களும் உண்டாயின. அல்லாமலும் ஆயிரங்களை [illegible] ஆறுகளாகவும், கற்பகவிருக்ஷங்கள்மரங்களாக[illegible]அமைந்திருந்தன. தேவர்களும் ரிஷிகளும் மனிதர்களாக வந்து பிறந்தார்கள். அரம்பாஸ்திரீகள் தாசிகளாகப் பிறந்தார்கள். ஆகையால் எல்லா ஸ்தலங்களும் உடலென்றும், அருணாசலஸ்தலம் முகமென்றும், அதில் சிவபெருமான கண்ணென்றும், இந்த ஸ்தலத்தின் பெருமையை அளவிட்டுச் சொல்லுதற் கருமையெனறும், இரண்டாம் சம்புவாகிய நந்திசுரர் மார்க்கண்டேயமுனிவருக்கு அநுக்கிரகஞ்செய்தார். அக்காலத்திற் சிவபெருமான திருவாய்மலர்ந்தருளியபடி அம்மலையின்மேல் கார்த்திகைமாதத்தில் வருகிற கார்த்திகைநக்ஷத்திரத்தில சோதி தரிசனமாகிக்கொண்டுவந்த பாவனையாக இப்போதும் அந்த மலையின்மேல் தீபதரிசனமாகின்றபடியால அத்தினத்தில் இந்திர தீர்த்த முதலாகிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து கிரியை வலம்வந்து தங்கள் சத்திக்குத தக்கபடி தர்மங்களையுஞ் செய்து அருணாசலேசுரரைத் தொழுது தீபதரிசனமுஞ்செய்து துதிப்பவர்கள் அளவிலாத சுபத்தையும மோக்ஷத்தையுமடைவார்கள்.

இப்புண்ணியதினத்திலே நம்சைவசமயிகளெல்லோரும தத்தம் வீடுகளைச் சுத்திசெய்து நன்கு அலங்கரித்து அவ்வீடுகளிலும மற்றும விசேடமான இடங்களிலுந் தீபமேற்றி எங்கும் ஒளிபரவச்செய்து அத்தீபங்களை அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நின்று விளங்கும பரஞ்சோதியாகப் பாவித்து வழிபடவேண்டும். ஆலயங்களிலும் நறுநெய்யுந்தாமரைநூலுங்கொண்டு விசேட தீபமேற்றி வழிபடல் வேண்டும்.

## கடிதம்.

### விக்கிரகாராதனையின் தத்துவார்த்தமும் அதன் விசிட்டமும்.

13-ம் இலக்கப் பத்திரிகைத் தொடர்.

இனி இந்துக்களது விக்கிரக வணக்கத்தினியல்பையும் கருத்தையும் விளக்குவதன்முன்னர் ஸ்தூல விக்கிரகத்தைக்கொண்டு தெய்வவணக்கம் செய்யலாமா? அதிற்பலமுண்டா? என்பதைப் பொதுப்பட விசாரிப்பாம். ஓர் தந்தையானவன் தன குழந்தையானது தனவீட்டு வேலைக்காரரெவரிடத்தேனும் பற்றுவைத்து, தான் அழைத்தாலும் தன்னிடத்தில வாராமல் இருப்பக்கண்டு அதனைத் தண்டிப்பானோ? அவ்வேலைக்காரனையாவது தண்டிப்பானோ? மாட்டான், அந்த வேலைக்காரனைக்கொண்டு குழந்தையை விசேடமாகப் பேணி ஆதரிக்கும்படி எச்சரிப்பான். ஆனால், அக்குழந்தையானது அவ்வேலைக்காரனையே தன் தந்தையென மாறுபடக்கொண்டு அவனைப்பற்றி நிற்பதாக அத்தந்தையறியின் அக்குழந்தையின் அஞ்ஞானத்திற்காகப் பரிதபிப்பதல்லாது அக்குழந்தையின்மீது அவனுக்குள்ள அன்பு அடங்காதோங்குமன்றோ. அங்ஙனமே ஒருவன் தெய்வம் ஒன்று உண்டெனநம்பி அதற்குத்தன் ஞானமின்றி உபசாரஞ்செய்ய விரும்பி, அதனையேற்றுக் கொள்கின்றதென்கிற விசுவாசத்துடன், மண்ணால் நிர்மித்த ஓர் வடிவினுக்கு வணக்கம்புரிவனேல், சர்வஞ்ஞத்துவமும், ஜீவகாருண்யமுமுள்ள கடவுள் அவனுக்கு நற்பயன் அளியாரென்று கூறத்துணிதல மூடர்கூற்றாம். இனி இந்துமதத்தவருடைய விக்கிரகஆராதனையின் இயல்பும் கருத்தும் என்னவெனபதை விசாரிப்பாம். இந்துமதமானது உலகத்திலுள்ள மதமென்று நாமங்கொண்ட எம்மதத்தினுடைய கொள்கையையும் தனக்குள் அடக்கியிருக்கின்றது.

இந்து மதத்தில் விக்கிரக ஆராதனையானது இருவகையாகச் செய்யப்பட்டுள்ளது. ஒன்று பக்திமார்க்கம்; மற்றொன்று வேதாகமநெறிபற்றியது. பக்திமார்க்கமானது முற்கூறிய ஸ்தூலவிக்கிரகவணக்கத்திலடங்கும். வேதாகம நெறிபற்றிய மார்க்கமாவது ஜீவாத்துமாவினுடைய தத்துவகுணங்களை உருவகப்படுத்தி அக்குணங்களையே பரமாத்துமாவின் ஆசனம் வாகனம் பூஷணாதிகளாக வகுக்கப்பட்டிருக்கின்றதென்பதை சிவாகமங்களின் வழியே காணலாம். உதாரணமாக இருதயகமலமே சுவாமி வீற்றிருக்கும் ஆசனமெனவும், அவ்வாசனத்துக்குப் பாதங்கள் தர்மம் ஞானம் வைராக்கியம ஐசுவரியமெனவும், ஆபரணங்கள் குண்டலினி சத்தியெனவும கூறப்பட்டுள்ளன. அவ்வாசனத்தில் கடவுளை ஆவாகிப்பதன்முன்னர் விக்கிரகத்துக்குப் பால் முதலியவற்றால் சுத்திசெய்யப்படுகிறது. அதனையே அபிஷேகமென்பர். சிவாகமத்தின் கருத்துப்படி பிம்பசுத்தியின் கிரியை முடிவுபெறுமளவும் கடவுள் அதில் எழுந்தருளினதாகவில்லை. அப்பிம்பசுத்திக்குப்பின்னர் "யாவத் பூஜாவஸாநகம தாவத் அஸ்மின் லிங்கே சந்நிதௌ பவ" என்னும் மந்திரத்தை உச்சரிக்கின்றனர். அதன் கருத்தாவது 'பூசை முடியுமளவும் இந்த லிங்கத்தில் எழுந்தருளுக' என்பதாம். அவ்வாறு எழுந்தருளியபின்னர் அபிஷேகதூபதீப நைவேத்தியங்கள் செய்யப்படுகின்றன. இக்கிரியைகளைக் கவனிக்கும்பொழுது இந்துக்கள் செம்பையுங் கல்லையும் தெய்வமாகக் கொண்டாடி வணங்குகின்றார்களென்பதை விளக்கி அன்னியர்கூறும் தூற்றுமொழி அவதூறு என்பதையும் உணர்க.

அன்றியும் விக்கிரகவணக்கத்தை விதித்தமைக்காரணம் அம்மட்டில் நில்லாது ஆன்மாக்களுடைய அறிவின் பரிபக்குவநிலையை சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்குபிரிவாகப் பகுத்து ஸ்தூலரூபமான விக்கிரகங்களின் வழியே கடவுளைத் தியானித்தல் சரியையென்றும், இவற்றோடு ஆலயங்களிற் செய்யப்படும் பணிவிடை சிவபூசைமுதலியன கிரியையென்றும், கடவுளிடத்து ஒரேமனதாயிருத்தல் அதாவது மனம், பாகியவிஷயத்திற் செல்லாது ஒன்றின்கண் நிற்றல் யோகமென்றும் சகலத்தினின்றும் விடுபட்டுக் களங்கமற்றுப் பரிபூரண நிலையைப்பெறுதல ஞானம என்றும், இவ்வாறு அனுஷ்டித்துச் சோபானமுறையாகச் சென்று ஞானநிலைக்கூடி முத்தியடைதற்கு விக்கிரகவணக்கம் இன்றியமையாதன வென்பது மறுக்கொணா உண்மை.

அன்றியும் ஆலயங்களிற் செய்யப்படுகின்ற அலங்காரங்களும், ஆராதனையில்நிகழுந் தூபதீபங்களும் அக்காலத்திற்கமைந்த வாத்தியகோஷங்களும அன்பர்களின் இருதயத்தில் ஆனந்தத்தையுண்டாக்கி ஆனந்தவடிவமாகிய அறிவினை ஆராய்ந்து தியானிப்பதற்கு அநுகூலிய சாதனங்களாகின்றன. ஆயின் ஆனந்தமே பயனாகக் கொண்டு மேற்கூறிய அலங்காராதிக ளமைக்கப்பட்டிருக்கின்றனவெனின், அபிநயங்களின் நடனமும் அவ்வாறேயாமன்றோ. அங்ஙனமாதலே வியபிசாரிகளாகிய பொதுமாதரின் நடனமும் அங்கீகரிக்கற்பாலதாமன்றோவெனின், அஃதன்று அனுபவத்தாலாயவரின ஆராய்ச்சியில் அங்ஙனம் அறியக்கூடவில்லை. எவ்வாறெனில அலங்காராதிகளாற் பிறக்கும் ஆனந்தத்திற்கும் பொதுமாதரைக் காண்டலாலெழும் ஆனந்தத்திற்கும் வேறுபாடு பெரிதுங் காணப்படும். முன்னையது சாத்துவிககுணாம்சம்; பின்னையது தமோகுணாம்சம். முன்னையது சத்தியம், சாந்தம், தயை முதலிய நற்குணங்களைப் பிறப்பித்தற்குச் சாதனமாகின்றது; பின்னையது காமக்குரோத முதலிய துர்க்குணங்களுக்குக் காரணமாகின்றது. இவ்வாறிருப்ப, ஆன்மாக்களுய்வதுகருதி யருளிய ஆகமங்களில இத்தகைய ஆசாரயீனமான நடைகள் ஏற்பட்ட காரணம் யாதோவெனின், ஆகமங்களிற் சொல்லிய தாசிகளென்னும் அடியார்களின் இலக்கணத்திற்கும் அனுஷ்டானத்தில் நடைபெற்றுவருகின்ற பொதுமாதரின் ஒழுக்கத்திற்கும் பேதம் பெரிதும் காணப்படும். நீக்குங்குறைவிடமாகிய வியபிசாரமுள்ள பொலித்தாசிகளை ஆலயங்களுக்குட்புகவிட்டு அவரது ஆட்டத்தைக் கண்டு மகிழ்ந்து புகழுமாறு செய்வரோ பெரியவர்.

நண்பர்காள், தமது அருமைக்குழந்தைகளுக்கு நல்லொழுக்கத்தையே பயிற்றுவிக்குந் தந்தைகாள், தமதுசீடர்களுக்குச் சாத்துவிககுணத்தையே புகட்டும் ஆசிரியர்காள், தத்துவஞானத்திற் சிறந்து உலகெங்கும் புகழ்ச்சிபெற்ற சாதுக்களின் சந்ததிகாள், தாமதத்திற்கென்றே கங்கணம்பூண்டு ஆலய அனுட்டானங்களைப் பழுதற ஆராய்ந்து நடத்துந் தலைமை பூண்ட தர்மகர்த்தர்காள், காம இச்சையை வரையறுத்து அடியுமாறு சிறுநூல் தொடங்கிப் பெருநூல் வரையுமுள்ள சாஸ்திரங்களால் விதியும முழக்குகின்ற நம் முன்னோர்கள், ஒழுங்கற்றகாமஇச்சையைக் காத்துவிர்த்து வளர்க்கும் கணிகையாது கூத்தைக் காமனை முனிந்த கடவுள் முன்னிலையில நடைபெறக் கூறுவரோ என்பதை நன்கு ஆராய்மின். ஆனால் தேவதாசிகள்தான் யாவரெனின், மனத்துறவால் மணஞ்செய்யாது நைஷ்டிகப்பிரமசாரிய ஆசிரமத்தைப்போல ஈசனையே கணவனாகக் கொண்டு அவனுக்கே பொட்டுக்கட்டி அவனுடைய திருத்தொண்டையே செய்துவருபவர் என்று ஒருவாறு கூறலாம். ஆகவே அத்தேவதாசிகள் அடியார்களுக்குத் தாயாகிய முறையில் நிற்கின்றனர்.

எனவே, நீ வியாசத்தால் மனதானது நிலைப்பதற்கு இலக்காகிய ஓர் வடிவம் வேண்டற்பாலதென்றும், ஆஸ்திகர் கடவுளுக்கு மூர்த்தி தலம் தீர்த்தம் கற்பித்திருப்பதால் அவற்றைத் தியானித்தற்கு உரியவடிவமாகிய விக்கிரகம் இன்றியமையாதென்றும் இந்துக்கள்புரியும்விக்கிரகாராதனையானது சரீரசுத்தியையும் மனத்தூய்மையையும் பயக்கத்தக்கதாகின்றதென்றும்; இடையிலே பரவலான நடைமுரண்களையகற்ற முயல்வது தற்காலத்து அறிஞர் கடமையென்றும் ஒருவாறு முடித்தாம்.

இங்ஙனம்,
செ. வை. செல்லையா,
வண்ணைநகர்.

## ஓர் பிதாவின் பிரலாபம்.

சைவசமயிகளே,

கேளுங்கள் என் வயிற்றெரிச்சற் சங்கதியை. நானோ காரைதீவிலுள்ள ஓர் நற்குடும்பத்தைச்சார்ந்தவன். உறவினர் பலர் எனக்குண்டு. விவாகஞ் செய்து வெகுநாள் புத்திரப் பேறின்றி மனங் கலங்கிக் கடவுளைப் பிரார்த்தித்தேன். கடவுள் என்மீதிரங்கி ஓர் புத்திரனைத் தந்தார். அப்புத்திரனுக்குத் துரைசிங்கமென நாமகரணமிட்டு உரியகாலத்தில் பள்ளிக்கு வைத்துத் தமிழ்ப் படித்தபின் காரை திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் ஆங்கிலபாடசாலையில் ஆங்கிலம் கற்பித்தேன். அவரு எழாந்தரச் சோதனை கொடுத்தபின் உயர்தரக் கல்வியின் நிமித்தம் ஐயகோ! என் மூடமதியால் அவனைக் கத்தோலிக்கர் கல்லூரியில கொண்டுபோய்ச் சேர்த்தேன். அப்போது அவனுக்கு வயசு பதினன்கு. ஒன்றுந் தெரியாத இப்பாலகனுக்கு அவர்கள் செய்ததைக் கேளுங்கள். கனவான்களே! பாவியாகிய என்னைப்போல் ஏமாந்து போகாதீர்கள். பெரியோரே! பெற்றவயிறெரிகின்றது. ஆகா! இப்படியும் உலகில் உண்டா? நீதியில்லையா? நியாயமில்லையா? இவர்களை விசாரிக்க அதிகாரிகள் இல்லையா? பையனுக்குச் செல்லவேண்டிய பணம் யாவும் கொடுத்துப் படிக்கவிட்டேன். அவர்கள் என் பிள்ளைக்கு மதபோதனைகளைப் படிப்படியாய் ஊட்டிவிட்டனர். தங்கள் மதத்தைச் சேராதிருப்பின் நித்திய நரகத்திற் கிடந் தவஸ்தை அடையப் போகின்றாய் எனப் பயமுறுத்தினர். ஐயோ பாவம் என்செய்வான் சிறுபாலன். சுயசைவசமய உணர்ச்சி பெரிதும் இல்லாதவன் அவர்கள்போதனையில் அவன் மனஞ் சென்றுவிட்டது. இவையாவையும் நான் கேள்விப்பட்டு மிக்க கவலையோடு குருமாரிடம் சென்று அவர்களைக் கடிந்து பேசினேன். அத்துடன் நில்லாது என்பையனையும் அவர்கள்முன்னிலையிலிட்டுக் கண்டித்தேன். இதைக்கண்ட அக்குருமார் தாம் இனி ஒருபோதும் அப்படிச் செய்யமாட்டார்களெனப் புகன்றமையால் தைரியம்பெற்று அவன் கல்விக்கு இடையூறு உண்டாகாவண்ணம் அவர்களிடம் விட்டுவிட்டுத் திரும்பிவிட்டேன். திரும்பவும் பையனின் மனம் அவர்களிலேயே நாட்டம் அடைவதைக்கண்டு அவனை அவர்களிடம் இருந்துபிரித்து யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கொண்டு போய்ச்சேர்த்துவிட்டு எனது பிழைப்புநோக்கி மன்னூருக்குப் போய்விட்டேன். சென்ற ஐப்பசி மாசம நான் இங்குவந்தபோது என்மகனைக் காணாது நான்பட்டபாடு இம்மட்டம்மட்டல்ல. நான் எவ்விடமும் தேடித்திரிந்தேன் கண்டிலேன். ஓர்கால் இவன் கத்தோலிக்கரிடம் போயிருப்பானோவென்றெண்ணி அங்குசென்று விசாரித்தேன். அங்குநின்ற பிள்ளைகள் சிலர் அவனைத் தாங்கள் அங்குக்கண்டதாகக் கூறினர்கள். அதை நம்பி அங்குள்ள கல்லூரி அதிகாரிகளை விசாரித்தேன். அவர்கள் அவனை இல்லை யென்று விட்டனர். பையன் அங்குதான் நிற்கின்றான் என்றெண்ணி நான் அவ்விடத்திலேயே நின்று மேன்மேலும் விசாரிக்கலானேன். நான் பிடிவாதமாய் நிற்பதைக்கண்ட அக்குருமார் அவனைக் கொழும்புத்துறையிலுள்ள தங்கள் தமிழ்ப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவிட்டார்களாம். இதை யறிந்ததும் நான் அங்கு சென்றேன். அன்பர்களே, நான் இவனைப் பெற்று வளர்ப்பதற்குப் பட்டதல்லக் கஷ்டம் இந்த நாலைந்துநாளும் நான்பட்டவேதனை மிகப்பெரிது. காவல்காப்போன், என்மேல் சீறிப்பாய்ந்தான். உள்ளே போகக்கூடாதென என்னைத் துரத்திவிட்டான். அன்பர்களே! என் தலைவிதியைநொந்து, என் குறையை ஆரிடத்திற் சொல்லலாமென ஆலோசித்தேன்; அப்போது ஓர் நற்குடும்பத்தைச் சார்ந்தவரும், என்னையறிந்தவரும், கத்தோலிக்கபிரபுவுமாகிய ஓர் பிரபல நியாயதுரந்தரரின் ஞாபகம் என்மனதில் வந்தது. அவரது பெயர் மெஸ், யோசேப். உடனே அவரிடஞ் சென்று என் குறைமுறையைக் கூறினேன். அவர் உடனே என்னுடன் கொழும்புத்துறைக்குச் சென்று விசாரித்தார். அவருக்குக் குருமார் பையன் தங்கள்வசமிருப்பதாகவும் மேலதிகாரிகள் உத்தரவின்றி அவனை விடோமென்றும் சொல்லிவிட்டனர்.

அன்பார்ந்த சகோதரரே; இவ்வகையான நிலையில் நின்று தவிக்கின்றேன். என் உயிர்க்கு ஆதாரமாயிருந்த என் குழந்தையை விட்டுப் பிரலாபிக்கின்றேன். நான் மாத்திரமா இவன் பிற்காலத்தில் பெரியமனுஷனாய் வரவேண்டுமென்றெண்ணி இவன் நிமித்தம் அதிகபணஞ் செலவிட்ட இவன்சிறிய தகப்பன்மார் மூவர் சிங்கப்பூர்ப் பகுதியில் இருக்கின்றனர். ஒருவர் Junior Dresser, இன்னொருவர் Sanitary Board Inspector, இன்னொருவர் Dresser. ஐயோ இவர்கள் இதை அறியும்போது என்ன துன்பம் அடையப்போகிறார்களோ யான் அறியேன். இதுவரையில் எங்கள் இனசனத்தில ஒருத்தரும் அந்நியமதஸ்தராயிருக்கவில்லையே. இது என்ன, அன்பர்களே! நினைக்க அந்தரமாக இருக்கின்றது. ஈசன் அருள்புரிவாரெனநம்பி வேலை செய்கின்றேன்.

காரைதீவு
12-11-18.

இங்ஙனம்,
அ. வி. முருகேசு.

## விளம்பரம்.

தென்மாகாணம், ஊவாமாகாணம், வடமேன்மாகாணங்களில் ஆவாசம் அல்லது பொன்னுவாச (முனவர) பட்டை எடுப்பதற்கான விற்பனவைப்பற்றியது.

| சேர்க்கப்படும் இடம். | சேர்க்கப்படும் கால அளவு. | விற்பனவின் நேரமும் இடமும். |
|---|---|---|
| 1. அம்பாந்தோட்டை வருமானப் பகுதியைச்சேர்ந்தடிஸ்திறிக். | | |
| (1) யேலாகேம் சாக்சு அரி (Yala Game Sanctuary) யும் டெஸிடென்ந்ஸ் போட்ஸ்மென் காவல் காடும் (Resident sportsmen's Reserve) உள்ளடக்கியபகுதி. | 1919-ம் ஆண்டு செனவரி மாதம் 1-ம்டு துவக்கம் 1919-ம் ஆ மேமீ 31-ந் தேதி வரைக்கும். | இவைகள் அம்பாந்தோட்டைக் காட்டுடையாருடைய கந்தோரில் 1918-ம் ஆ நவம்பர் மீ 19உ செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஒருமிக்க விற்கப்படும். விற்பனவுக்கு முதல்நாளில் உதவிவனபரிபாலகர் பட்டைகள் சேர்க்கப்படும் இடத்தைக் குறிக்கின்ற படத்தையும், வாங்குவோருடன் எழுதப்படும் நிர் எழுத்து உடன்படிக்கைப் பத்திரத்தையும், வாங்க விரும்புவோர்களுக்கு முற்பகல் 10 மணி துவக்கம் 11 மணி வரைக்கும், பிற்பகல் 3 மணி துவக்கம் 4 மணி வரைக்கும் காட்டுவார். இன்னும் குறித்த விற்பனவைப் பற்றித் தேவையான வேறு விபரங்களையும் சொல்லுவார். |
| (2) மேற்குறிக்கப்பட்ட இரு இடங்கள் நீங்கலாக மற்றைய இடங்கள். | 1918-ம் ஆ டிசம்பர் மாதம் 1-ந் தேதி துவக்கம் 1919-ம் ஆ செப்டம்பர் மீ 30-ம் தேதி வரைக்கும். | |
| 2. ஊவாமாகாணம். | | |
| (1) டெஸிடென்ந்ஸ் போட்ஸ்மென் காவல் காட்டுக்கு (Resident sportsmen's Reserve) புதிதாகச் சேர்க்கப்பட்டபரப்பை உட்படஉள்ளபகுதி. | 1919-ம் ஆ செனவரி மாதம் 1-ந் தேதி துவக்கம் 1919-ம் ஆ மேமாதம் 31-ந் தேதி வரைக்கும். | |
| 2. மேற்குறிக்கப்பட்ட இடம் நீங்கலாக மற்றைய இடங்கள். | 1918-ம் ஆ டிசம்பர் மீ 1-ந்தேதி துவக்கம் 1919-ம் ஆண்டு செப்டம்பர் மீ 30உ வரைக்கும். | |
| 3. புத்தளம் வருமானப் பகுதியையடக்கிய டிஸ்திறிக். | | |
| (1) வடமத்தியமாகாணத்தில் சேரும் பகுதியை அடக்கிய உவில் பற்று வீவா கேம் சாக்சு வரி (Wilpotuwewa Game Sanctuary) யைச் சேர்ந்த பகுதி. | 1919-ம் ஆ செனவரி மாதம் 1-ந் தேதி துவக்கம் 1919-ம் ஆ மேமாதம் 31-ந் தேதி வரைக்கும். | விற்பனவு: புத்தளம் காட்டுடையாருடைய கந்தோரில் 1918-ம் ஆ நவம்பர் மீ 19-ந் தேதி முற்பகல் 11 மணியளவில் நடத்தப்படும். |
| 2. மேற்குறிக்கப்பட்ட இடம் நீங்கலாக மற்றைய இடங்கள். | 1918-ம் ஆ டிசம்பர் மாதம் 1-ந் தேதி துவக்கம் 1919-ம் ஆ செப்டம்பர் மீ 30உ வரைக்கும். | |

விற்பனவின் பொருத்தங்களைப்பற்றிய முழுவிபரத்துக்கு கவண்மேந்து 1918-ம் ஆ அக்டோபர் மீ 25-ந் திகதியின் 6973-ம் இலக்கத்தைக்கொண்ட கசற்பத்திரிகையிற் பார்த்தறிந்துகொள்ளலாம்.

ஆவாசம்பட்டைக்கு இந்தியாவில் இறக்குமதித்தீர்வை விலக்கப்பட்டிருப்பதைக் கவனித்துக் கொள்ளவேண்டியது.

ஏச். எவ் ரோமலின்,
வனபரிபாலகர்.

கண்டி,
1918-ம் ஆ நவம்பர் மீ 5உ.

## 'நைசை'என்னும் கட்டளைப்பத்திரம்.

வதுளையிலேயுள்ள டிஸ்றிக் கோட்டிலே தென் இந்தியாவின் அடைக்கம்பட்டியில் மாண்டுபோன உனுகொல்லைதோட்டத்து இராமசாமிக் கணக்கப்பிள்ளையின ஆஸ்திக்காக.

பூதல் வழக்கு
இல. B/546.

வதுளை உனுகொள்ளை தோட்டத்து கோபால் கங்காணி

பெட்டிசகாரன்.

உனுகொல்லை தோட்டத்தி லுள்ளவர்களான 1. நாகம்மா, 2 மூத்தம்மா, 3. மருதமுத்து, 2-ம் உத்தரவாதி சிறுவயதுக்காரியானபடியால் மேற்சொல்லிய உனுகொல்லைதோட்டத்து மருதமுத்து பராபரிப்புக்காரன்

உத்தரவாதிகள்.

இக்காரியம் 1918-ம் ஆ ஆவணி மீ 28உ டிஸ்திறிக் நீதிபதியாகிய ஜே. ஆர். வோல்டற துரை முன்பாயும் பெட்டிசக்காரனின் பெருக்கோராகிய மெல்கம்பொட்கற்துரை முன்பாயும் பெட்டிசக்காரனுடைய 1918-ம் ஆ ஆவணி மீ 28உ யைக்கொண்ட சத்தியக்கடுதாசியும் வாசிக்கப்பட்டு மேற்சொன்ன உத்தரவாதிகள் அல்லது எவ்வித உரித்தாளிகளாவது 1918-ம் ஆ ஐப்பசி 2உ அல்லது அதற்குமுன் இக்கோட்டின் முன் வந்து போதிய நியாயங்கள் காட்டாவிட்டால் மேற்சொன்ன 3-ம் உத்தரவாதியை சிறுவயதுடைய மூத்தம்மாவின் பராபரிப்புக்காரனாகவும், மாண்டுபோனவனின் சகோதரனும் உரித்தாளியாயு மிருப்பதால் மாண்டுபோனவனின் ஆஸ்திகளைப் பராபரிக்கத் தத்துவக்கடிதங்களும் கொடுக்கப்படுமென்று கட்டளையிடப்பட்டது.

கையொப்பம் ஜே. ஆர். வோல்டர்ஸ்.
டிஸ்திறிக் நீதிபதி.

1918ம் ஆ ஐப்பசி மீ 28உ.

1918-ம் ஆ ஐப்பசி மீ 2உ

காரணங்கள் காண்பிப்பதற்கு 1918-ம் ஆ ஐப்பசி மீ 23உ தவணை இடப்பட்டது.

கையொப்பம் ஜே. ஆர். வோல்டர்ஸ்,
டிஸ்திறிக் நீதிபதி.

1918-ம் ஆ ஐப்பசி மீ 23உ

காரணங்கள் காண்பிப்பதற்கு 1918-ம் ஆ கார்த்திகை மீ 20உக்குத் தவணை இடப்பட்டது.

கையொப்பம் ஜே. ஆர். வோல்டர்ஸ்,
டிஸ்திறிக் நீதிபதி.

## இதைக் கவனியுங்கள்.

உலகமெங்குங்கியாதிபெற்றுக்கையாண்டுவரும மருந்துகளின் விபரம்.

### 1. கெர்ப்ப உற்பத்தி மூலிகை உப்பு.

இது கெர்ப்பஸ்தானத்தில் சதை வளர்தல், பாசி படர்தல், காலாகாலங்களில் மாதவிடாயாகாமற் சரீரம் பருத்தும் இளைத்தும் இருத்தல், பொறுக்க முடியாத வயிற்றுவலி முதலிய காரணங்களால் கெர்ப்பஉற்பத்தி இல்லாதிருப்போர்க்கு அந்நோய்களை மாற்றிக் கெர்ப்பந் தரிக்கச்செய்யுமென்பது திண்ணம்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூபா க.

### 2 தாதுவிர்த்திக்குப் பஞ்சாமிர்த லேகியம்.

இந்த அமிர்தம்போன்ற லேகியத்தைப் பாவித்ததன்பின்பே இதன் குணம் வெளியாகும்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூ. உ, அணா அ,

### 3 பிரமேக வியாதிக்குச் சந்துச்சேகரம்.

எவ்வித பிரமேகமும் இம்மருந்தை யருந்தினால் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூபா உ.

### 4. எவ்வித வாய்வுகளுக்குஞ் சண்டமாருதக் குளிகை.

சரீரத்தின் எந்தஇடத்திலும் நொக்குத்துவ்வாய்வுகளுக்கும் மற்றைஎவ்விதவாய்வுகளுக்கும் இம்மருந்தேகாண்டபம். ஐந்துநிமிஷத்தில் குணமாகும்.

கச மாத்திரை புட்டி ஒன்று ரூ. க, அணா அ.

### 5. மேகசஞ்சீவிச் சூரணம்.

மேகரோக புண்டாகியபின் காணப்படும் அரையாப்பு முதலிய சர்வரோகங்களையும் இம்மருந்து நீக்கிவிடும். உஉ நாள் மருந்து ரூ. உ.

### 6. புளிப்பு மாதுளம்பழ லேகியம்.

அன்னத்துவேஷம், பித்தகிறுகிறுப்பு, ஜீரணக்குறைவு, மலக்கட்டு இவைகளுக்குக் கைகண்ட ஒளடதம்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூ. க, அணா அ.

### 7. இளைப்புஇருமலுக்குச் சுவாசகாசச்சூரணம்

எவ்வித இளைப்பு இருமல்களையும் அகற்றும். உஉ நாள் மருந்து ரூ. உ.

### 8 மூலிகை ரத்தினத் தைலம்.

அபூர்வ மூலிகைகளாற் தயாரித்த சுகந்த பரிமளமுள்ளது. குணத்திற் சிறந்தது. மணத்தில் மிகுந்தது. ஒருமுறை அரைக்கால் ரூபாயிடை யளவு தைலத்தைத் தலைக்கிட்டுக்கொண்டால் அன்று முழுவதும் ஜில்ஜில்லுப்புடனிருப்பதுமன்றி ஒரு வாரம் வரை பரிமளம் மாறாது. 8 அவுன்ஸ் டின் 1-க்கு ரூ. 1.

### 9. பரிமள பற்பொடி.

பல் கூச்சம், இரத்தம் வருதல், துர்நாற்றம் இவைகளை மாற்றிப் பல் கறுக்காமல் முத்துப்போலிருந்து சுகந்தமணக்கமழச்செய்து பல்வலியையும் 2 நிமிஷத்தில் கேட்கும்.

டப்பி 1 க்கு ரூ. 0-4-0 டஜன் 0 க்கு ரூ. 2-12-0.

### 10. படர்மேக சங்காரி வெண்ணெய்.

மேகரோகத்தால் தேகத்தில்விழும் எவ்வித பத்துப் படைகளையும் க வேளையிற் குணமாக்கும்.

டப்பி க-க்கு அணா ச. டஜன் க-க்கு ரூ. உ, அ. அ.

எவ்வித மருந்துகளும் உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

### தவறாதீர்கள்! இதுசமயம்!! தவறாதீர்கள்!!! உங்களுங்கள் அதிஷ்டத்தைப் பரீக்ஷித்துப்பாருங்கள்.

(க) ஜாதகத்தை அனுப்புங்கள். இல்லாவிடில் ஜனனவருஷம் மாசம் தேதி நாழிகை என்னும் இவைகளை அனுப்புங்கள். இல்லாவிடில் இது பார்த்தவுடன் இதனடியிற் குறித்துள்ளவைகளில் எந்தப்பாகம் வேண்டுமோ அந்தப்பாகம் வரைந்தனுப்பினால் இன்னின்ன காலத்தில் இன்னவை நடக்குமென இன்னவை கிட்டும் கிட்டாதெனவும் கருதும் இடைத்த சேரத்தைக் கொண்டு இன்ன விதமுடிவுபெறுமென்று சண்முகநாதன் திருவருளால் வரைந்தனுப்புவோம்.

(உ) க. ஆயுட்பாகம், உ. எந்தவிதத்தினால் தனங்கிடைக்கும், ங. கல்யாணம் சொந்தமா, ச. களத்திரபாகம் எத்தனை, ரு. அது முன்னு பின்னு, சு. புத்திரனுண்டா, எ. தனம் வைத்துப் போவேனு, அ. மரணமாகுமிடம் சுயதேசமா, கூ. சொந்தவீடு நிலம் கிட்டுமா, கo. கடன் எப்போது நிவிர்த்தியாகும், கக. விவகாரம் ஜெயமாகுமா, கஉ. வினைத்தகாரியம் முடியுமா.

தனி ஒருபாகம் சார்ஜ் ரூ. க.

முழுத்தொகையும் அனுப்பவேண்டும்.

கஉ பாகம் சார்ஜ் ரூ. ரு.

பாதிச்சார்ஜ் முற்பணமாக அனுப்புவோர்க்கு வி. பி. போஸ்டில் அனுப்புவோம்.

விபரந்தெரியவிரும்புவோர்விலாசம எழுதினால் ஜோதிஷ, வைத்திய "கெயட்லாக்" இனமாக அனுப்புவோம்.

வீ. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

K. V. கோவிந்தசாமிநாயுடு,
ஜோதிஷம், வைத்தியம்,
மேலைச் சித்திரவீதி,
மதுரை.

☞ இவைகளுக்கு எழுதவோர் இப்பத்திரிகையைக் குறிப்பிட்டுக் காட்டவும்.

## அடைவு நகைவிற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ச பெற்று அடைவுபிடிக்கும் தலவாக்கொல்லை நா. சி. மா. மாரிமுத்து அவர்களிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி டைசட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த எலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:

| வருஷம். | மாசம். | தேதி | நம்பர் | கொடுத்த ரூபா | சதம் | அடைவு வைத்தவருடைய பெயர், | இருக்குமிடம். | அடைவுவைத்த ஒவ்வொருநகைகளினதும் விபரம்: |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1916 | ஆடி | 3 | 32 | 10 | 00 | நல்லு, | ஸ்கல்ப்பாதோட்டம் | 1 தங்ககாறை |
| | | 13 | 116 | 8 | 00 | வெள்ளைச்சாமிக்கங்காணி, | புதுகட்டகொடை | 1 சோடி தங்ககொப்பு |
| | | 26 | 229 | 10 | 00 | படைவெட்டி, | வேர்க்கொல்லை | 1 தங்ககாறை |
| | | 30 | 258 | 75 | 00 | கே எஸ் மோசேஸ் | தலவாகலொல்லை | 1 சோடி தங்கக்காப்பு |
| | ஆவணி | 7 | 340 | 5 | 00 | மூர்க்கன் கணக்கப்பிள்ளை | சின்னருணிவத்தை | 1 பொன்மணிக்கோவை |
| | | 8 | 348 | 10 | 00 | வேலாயுதம் | புலிகண்டமலை | 1 சோடி தங்கதோடு |
| | | 8 | 354 | 6 | 65 | அருளாந்து கணக்கப்பிள்ளை | அன்டிறசம் தோட்டம் | 1 வெள்ளி அரைஞாண்கொடி |
| | | 13 | 390 | 5 | 00 | கிறிகோறிஸ் அப்பு | தலவாக்கொல்லை | 1 பொன் பின் |
| | | 14 | 418 | 7 | 00 | தங்கசாமி | கல்க்கந்தை | 1 சோடி தங்கக்காப்பு |
| | | 15 | 421 | 8 | 50 | தா முத்தையா | மடக்கம்பறை | 2 வெள்ளி அரைஞாண்கொடி |
| | | 19 | 428 | 5 | 00 | கே எ பீறிஸ் | பெரியமல்லிகைப்பூ | 2 வெள்ளிச்சங்கிலி |
| | | 19 | 474 | 8 | 00 | வேம்படிகங்காணி | திஸ்பனைவாழைமலை | 2 சோடி தங்கக்கடுக்கன் |
| | | 21 | 522 | 31 | 00 | மூ வெ கோவிந்தன்செட்டி | தலவாக்கொல்லை | 1 தங்கக் கைப்பட்டம், 1 தங்கமோதிரம் |
| | புரட்டாதி | 11 | 744 | 5 | 00 | கா சு வெள்ளைசசாமி | ,, | 1 சோடி வெள்ளிக்காப்பு, 1 வெள்ளிச்சங்கிலி |
| | | 26 | 911 | 10 | 00 | பூவாயி | ,, | 1 சோடி தங்கக்கொப்பும், 3வெள்ளிமோதிரமும் |
| | ஐப்பசி | 28 | 1206 | 8 | 50 | சின்னத்தம்பிக்கங்காணி | சின்னக்கொத்தமல்லி | 1 தங்கமேலீடு |
| | | 30 | 1229 | 13 | 00 | ச இராயப்பன்கங்காணி | செல்லக்கந்தை | 1 சோடி வெள்ளிக் கால் தண்டை |
| | கார்த்திகை | 8 | 1306 | 6 | 00 | மருதமுத்துக் கங்காணி | லூசாதோட்டம் | 1 சோடி பொன்கடுக்கன் |
| | | 8 | 1315 | 5 | 50 | பூவாயி | பிலாக்கொல்லை | 1 சோடி வெள்ளிக்காப்பு, 1 வெள்ளிமயிர்மாட்டி 1 தங்கமுருகு, 1 வெள்ளி மோதிரம், ஆ 4. |
| | | 8 | 1316 | 10 | 50 | வி கணவதிப்பிள்ளை | மூயர்தரதோட்டம் | 1 தங்கக் கல்பதித்தமோதிரம் [1 தங்கஒணப்பு |
| | | 8 | 1318 | 35 | 60 | சு சுடலை ஆசாரி | தலவாக்கொல்லை | 1 சோடி தங்கமயிர்மாட்டி, 1 தங்கதட்சரக்கூடு, |
| | | 16 | 1400 | 7 | 00 | ரூமசாமிக்கவுண்டர் | கொழும்பு | 1 சோடி வெள்ளிக்காப்பு, 1சோ. தங்கக்கடுக்கன் |
| | | 21 | 1451 | 22 | 00 | பெ சந்தணம் கணக்கப்பிள்ளை, | ஸ்கல்ப்பாதோட்டம் | 1 சோடி தங்கமேலீடு |
| | | 26 | 1493 | 5 | 80 | பெரியண்ணன் | அன்டிறம்புதுக்காடு | 1 சோடி தங்கக்கடுக்கன் [தட்டு |
| | மார்கழி | 6 | 1612 | 6 | 50 | மூ சோமசுந்தர ஆசாரி | பெரியமல்லிகைப்பூ | 1 சோடி வெள்ளிக்காப்பு, 1சோடி தங்கமூக்குத் |
| | | 17 | 1735 | 5 | 00 | வில்லியம் சிஞ்ஞோ | பத்தனை | 1 வெள்ளிச் சங்கிலி [ரம் |
| | | 17 | 1739 | 5 | 00 | சப்பையாக்கங்காணி | பெரியமல்லிகைப்பூ | 1 வெள்ளி அரைஞாண்கொடி, 1 வெள்ளிமோதி |
| | | 29 | 1852 | 6 | 00 | இராசம்மா | தலவாக்கொல்லை | 1 தங்கக்கொண்டைறக்கர் |
| 1917 | தை | 4 | 1916 | 15 | 00 | மூ முத்துச்சாமி ஆசாரி | பெரியமல்லிகைப்பூ | 1 பொன்கொடி |
| | | 14 | 1989 | 5 | 50 | அருளாந்துக்கங்காணி | பெரியகொத்தமல்லி | 1 சோடி வெள்ளிக் கால்தண்டை |
| | | 25 | 2101 | 15 | 00 | பெரியமுத்துச்சாமி | உடுதைலை | 1 சோடி தங்கமேலீடு |
| | | 31 | 2186 | 5 | 00 | பெரியசாமிக்கங்காணி | மலைதோட்டம் | 1 சோடி தங்க தண்டட்டியல் |
| | மாசி | 2 | 2196 | 8 | 50 | ச இராயப்பன் கங்காணி | கொட்டியாக்கொல்லை | 1 சோடி தங்கமுருகு |
| | | 10 | 2314 | 8 | 00 | அமீது கங்காணி | நானுவயல் தோட்டம் | 1 சோடி தங்கமுருகு |
| | | 15 | 2383 | 43 | 00 | மாரியாயி | ,, | 1 சோடிதங்கமேலீடு, 1 சோடி தங்கக்கொப்பு |
| | | 27 | 2482 | 5 | 00 | ஆதியப்பன் கங்காணி | கல்க்கந்தை | 1 தங்கக் குண்டலம் |
| | பங்குனி | 1 | 2499 | 5 | 00 | பீ டி லத்திப் | தலவாக்கொல்லை | 1 அரைத்தங்கப்பவுண் |
| | | 9 | 2551 | 535 | 50 | வா கா முத்துச்சாமிக்கங்காணி, | நாகசேனை | 1 சோடி தங்கக்காப்பு, 1தங்கஅட்டியல், 1தங்கக்காறை, 1தங்கக்கைப்பட்டம், 6தங்கமோதிரம், 1 சோ. தங்கச்சிமிக்கி, 1தங்கமாலை.1 வெள்ளி [அரைஞாண்கொடி. |
| | | 12 | 2579 | 20 | 00 | ஆ செங்காயன் கங்காணி | அலுப்பிலாக்கந்தை | 1 சோடி தங்கமேலீடு |
| | | 24 | 2652 | 10 | 00 | பூஞ்சிறுவே | மடக்கம்பறை | 1 தங்கப்பவுண் |
| | வைகாசி | 7 | 3005 | 7 | 00 | கா சா அமீதுகங்காணி | நானுவயல்தோட்டம் | 1 வெள்ளிச்சங்கிலி |
| | | 9 | 3012 | 160 | 00 | இ சுப்பையா | தலவாக்கொல்லை | 1 தங்க அட்டியல் |
| | | 9 | 3016 | 5 | 50 | மம்மது | ,, | 1 வெ. அட்டியல், 1 வெ. முகப்பு, 4 வெ காப்பு, |
| | | 17 | 3097 | 10 | 50 | த முத்தையா | ,, | 1 சோடி வெள்ளிப்பாதசரம் [1 வெ. தாயித்து. |
| | | 18 | 3109 | 5 | 00 | மூ முத்துச்சாமி ஆசாரி | பெரியமல்லிகைப்பூ | 1 சோடி பொன்கடுக்கன் |
| | ஆனி | 1 | 3219 | 6 | 00 | வில்லியன் | தலவாக்கொல்லை | 1 சோடி தங்கக்காதோலை |
| | | 2 | 3221 | 5 | 00 | சிவாமணி உபாத்தியாயர் | பனையதோட்டம் | 1 வெள்ளி அரைஞாண்கொடி |
| | | 9 | 3288 | 10 | 50 | பழனி ஆசாரி | பத்தனை | 1 சோடி பொன்மேலீடு |
| | | 24 | 3452 | 15 | 00 | கப்பன் கங்காணி | கேப்புரிதோட்டம் | 1 சோடி பொன்மேலீடு, 1சோ. பொன்நாகபடம் |
| | | 26 | 3475 | 8 | 50 | பலோராண்டிக்கங்காணி | அன்டிறசம்தோட்டம் | 1 தங்கமோதிரம் |
| | | 29 | 3491 | 20 | 00 | சொக்கலிங்கம் கங்காணி | அலுப்பிலாக்கந்தை | 1 சோடி தங்கமேலீடு |
| | | 30 | 3501 | 11 | 00 | ஆ மிசங்காயன் கங்காணி | ,, | 1 சோடி தங்கத் தண்டட்டியல் |

விற்பனவு:—1918-ம் ஆண்டு கார்த்திகை மாசம் 23-ந் தேதிக்குள்ளாகத் திருப்பின நகைகள் நீக்கி மிகுதியாய் இருக்கிற நகைகள் மேற்படி மாரிமுத்து அவர்களின் 123-ம் நம்பர் புடைவைக்கடையிலிருந்து வெந்தியில் விற்கப்படும்.

வெந்தி மேஸ்தர்: தெ. அ. ராசநாயகம்,
Printing Office, Hatton.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்

☞ Printed and published by S. T. M. P. Sithambaranatha Chettiar, for the Proprieto at the SaivaPrakasa Press, Jaffna,